උසස් පෙළ පරීක්ෂණ ඒකකයේ ප්‍රයෝජනය සඳහා පමණි

AL/2025/33/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
## General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | |
|---|---|---|
| ගිණුම්කරණය I<br>கணக்கீடு I<br>Accounting I | 33 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- ❋ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❋ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ❋ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ❋ ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.
- ❋ உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- ❋ செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

சுட்டெண் : ..................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்**

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டுச் செயன்முறையில் இடம்பெறும் பின்வரும் படிமுறைகளின் சரியான ஒழுங்குவரிசை யாது?

A - கொடுக்கல் வாங்கல்களை அவை தொடர்புடைய மூலப்பதிவேடுகளில் பதிவுசெய்தல்.

B - மூல ஆவணங்களைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல்களை இனங்காணல்.

C - பரீட்சை மீதியைத் தயாரித்தல்.

D - மூலப்பதிவேடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களைப் பொதுப் பேரேட்டுக்கு மாற்றுதல்.

(1) A, B, C, D (2) A, B, D, C (3) B, A, C, D
(4) B, A, D, C (5) B, D, A, C (......)

● **2, 3, 4 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அருண் வணிகமானது உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனமாகும். பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உரிமையாளருடன் தொடர்புடைய நிகழ்வுகள் 2025 ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

**A** - நிறுவனத்தின் உரிமையாளர் ரூ. 500 000 பெறுமதியான காணியொன்றை மேலதிக மூலதனமாக வழங்கியுள்ளார்.

**B** - இந்நிறுவனம் 01.08.2025 இல் ரூ. 240 000 கிரயமான உணவு செய்முறைப்படுத்தும் இயந்திரமொன்றைக் காசுக்குக் கொள்வனவு செய்துள்ளதுடன் அதனை அத்தினத்திலிருந்து பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இது 24 மாதங்களுக்குப் பெறுமானத் தேய்விடப்படும்.

**C** - நிறுவனமானது 10% காசுக்கழிவைப் பெற்ற பின்னர் வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 180 000 ஐச் செலுத்தியுள்ளது.

**D** - நிறுவனம் ரூ. 15 000 வட்டி உட்பட மாதாந்த கடன் தவணைக் கட்டணம் ரூ. 60 000 ஐச் செலுத்தியுள்ளது.

**E** - உரிமையாளருக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமான ரூ. 300 000 பெறுமதியான கணினியானது வணிக வளாகத்தில் இருந்த வேளையில் திருடப்பட்டுள்ளது.

**2.** அருண் வணிகத்தின் புத்தகங்களில் **A** மற்றும் **E** என்பவற்றுக்கான சரியான கணக்கீட்டுப் பதிவினைத் தீர்மானிப்பதில் பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கரு / எண்ணக்கருக்களில் எது / எவை கருத்திற்கொள்ளப்படுகின்றது / ன?

(1) வியாபார அலகு
(2) இணைத்தல்
(3) வியாபார அலகு மற்றும் இணைத்தல்
(4) வியாபார அலகு மற்றும் முன்னெச்சரிக்கை
(5) இணைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை (......)

**3.** 2025 ஓகஸ்ட் மாதத்துக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில் மேலே தரப்பட்டுள்ளவற்றுள் எந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கு இணைத்தல் எண்ணக்கரு பிரயோகிக்கப்படுகின்றது?

(1) A, B மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) B, D மாத்திரம்
(4) A, B, E மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (......)

**4.** பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது அருண் வணிகத்தில் 31.08.2025 இல் உள்ளவாறான மேற்படி எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் தேறிய தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது?

| | சொத்துக்கள் (ரூ.' 000) = | பொறுப்புக்கள் (ரூ.' 000) + | உரிமையாண்மை (ரூ.' 000) |
|---|---|---|---|
| (1) | – 50 | – 245 | + 195 |
| (2) | – 50 | – 243 | + 193 |
| (3) | – 40 | – 245 | + 205 |
| (4) | + 250 | – 245 | + 495 |
| (5) | + 260 | – 245 | + 505 |

(......)

● **5, 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சில்லறை வணிகமான விமலன் ரேடர்ஸ் ஆனது ரூ. 300 000 காசினை முதலிட்டு 01.01.2025 இல் தொடங்கப்பட்டுள்ளது. இவ் வணிகமானது பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அதன் அனைத்து காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்டு வருகிறது. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2025 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

**A** - சம்பந்தன் ரேடர்ஸ் இடமிருந்து ரூ. 944 000 கடனிற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. (ரூ. 144 000 VAT உட்பட)

**B** - சம்பந்தன் ரேடர்ஸ் இடமிருந்து கொள்வனவு செய்த பொருட்களில் ரூ. 177 000 ஆனவை திருப்பியனுப்பப்பட்டன. (ரூ. 27 000 VAT உட்பட)

**C** - ரூ. 600 000 கிரயமான பொருட்கள் ரூ. 885 000 காசிற்கு விற்பனை செய்யப்பட்டன. (ரூ. 135 000 VAT உட்பட)

**D** - சம்பந்தன் ரேடர்ஸ் இற்குக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகையானது ரூ. 30 000 காசுக் கழிவு பெறப்பட்டதன் பின்னர் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

**5.** விமலன் ரேடர்ஸ் இன் மூலப்பதிவேடுகளில் மேற்குறிப்பிட்ட **A, B, C** மற்றும் **D** கொடுக்கல் வாங்கல்களைப் முறையாகப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்:

(1) கொள்வனவுப் பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(2) கொள்வனவுப் பட்டியல், வரவுத்தாள், வைப்புச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) கொள்வனவுப் பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(4) கொள்வனவு உறுதிச்சீட்டு, வரவுத்தாள், விற்பனைப் பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
(5) கொள்வனவு உறுதிச்சீட்டு, செலவுத்தாள், விற்பனைப் பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு (......)

**6.** விமலன் ரேடர்ஸ் இன் 2025 ஜனவரி மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டின் மொத்தத்தினை பொதுப் பேரேட்டிற்கு மாற்றுவதற்கான சரியான இரட்டைப் பதிவு

| | விபரம் | வரவு (ரூ.' 000) | செலவு (ரூ.' 000) |
|---|---|---|---|
| (1) | கொள்வனவுக் கணக்கு | 650 | |
| | VAT செலவுகள் கணக்கு | 117 | |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 767 |
| (2) | கொள்வனவுக் கணக்கு | 800 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | 144 | |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 944 |
| (3) | கொள்வனவுக் கணக்கு | 767 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 117 |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 650 |
| (4) | கொள்வனவுக் கணக்கு | 944 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 144 |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 800 |
| (5) | கொள்வனவுக் கணக்கு | 800 | |
| | VAT செலவுகள் கணக்கு | 144 | |
| | கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 944 |

(......)

**7.** விமலன் ரேடர்ஸ் இன் 31.01.2025 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறிய இலாபம் மற்றும் 31.01.2025 இல் உள்ளவாறான VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி

| | தேறிய இலாபம் (ரூ.' 000) | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 150 | 9 வரவு |
| (2) | 150 | 18 செலவு |
| (3) | 180 | 18 வரவு |
| (4) | 180 | 18 செலவு |
| (5) | 315 | 9 வரவு |

(......)

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

முத்து ரேடர்ஸ் ஆனது அனைத்து காசு கொடுக்கல் வாங்கல்களையும் வங்கிக் கணக்கொன்றினூடாகச் செய்து வருகிறது. இவ் வணிகத்தின் 2025 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களின் சுருக்கம் பின்வருமாறு:

| | ரு.' 000 |
|---|---|
| 01.01.2025 இலுள்ளவாறான மீதி - செலவு | 100 |
| வசூலிக்கப்பட்ட காசோலைகள் (31.12.2024 இல் வைப்பிலிடப்பட்ட காசோலை ஒன்று உட்பட) | 800 |
| நேரடி வைப்புக்கள் - முதலீட்டு வருமானம் | 125 |
| கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் | (600) |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு - காப்புறுதித் தவணைக் கட்டணம் | (60) |
| வங்கிக் கட்டணங்கள் | (5) |
| 31.01.2025 இலுள்ளவாறான மீதி - செலவு | 360 |

மேலதிக தகவல்கள்:

- வணிகத்தின் 01.01.2025 இலுள்ளவாறான காசுக் கணக்கு மீதியானது அத்திகதியிலுள்ள வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் 31.12.2024 இல் வங்கியில் வைப்பிலிடப்பட்ட போதிலும் வசூலிக்கப்படாத ரு. 100 000 காசோலை ஆகும்.
- வணிகத்தின் காசுக் கணக்கின்படி, 2025 ஜனவரி மாத காலத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட மொத்தக் காசுப் பெறுவனவுகள் மற்றும் காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்ட மொத்தக் காசுக் கொடுப்பனவுகள் முறையே ரு. 950 000 மற்றும் ரு. 700 000 ஆகக் காணப்பட்டது.
- நேரடி வைப்பு, நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பன வங்கிக் கூற்று பெறப்பட்டதன் பின்னர் காசுக் கணக்கில் பதியப்படுகின்றன.
- வணிகத்தின் 31.01.2025 இலுள்ளவாறான காசுக் கணக்கு மீதியானது அத்திகதியிலுள்ள வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை.

8. முத்து ரேடர்ஸ் இன் 31.01.2025 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்களுக்கமைய பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

A - 01.01.2025 இலுள்ளவாறு வணிகத்தின் காசுக் கணக்கின் வரவு மீதியானது ரு. 200 000 ஆக இருந்தது.
B - இம்மாதத்தில் வங்கியில் வைப்பிலிடப்பட்ட போதிலும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரு. 150 000 ஆக இருந்தன.
C - இம்மாத இறுதி வரை கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரு. 100 000 ஆக இருந்தன.
D - இம்மாதத்தில் வணிகத்தின் மொத்த காசுப் பெறுவனவுகள் ரு. 1 075 000 ஆகும்.

(1) A, C மாத்திரம்  (2) B, D மாத்திரம்  (3) A, C, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம்  (5) A, B, C, D ஆகிய எல்லாம்  (......)

9. 31.01.2025 இலுள்ளவாறான வங்கிக் கூற்றினைப் பெறுவதற்கு முன்னரான காசுக் கணக்கு மற்றும் வங்கிக் கூற்றினைப் பெற்றதன் பின்னரான சீராக்கிய காசுக் கணக்கு மீதி

| | வங்கிக் கூற்றைப் பெறுவதற்கு முன்னரான காசுக் கணக்கு மீதி - வரவு (ரு.' 000) | சீராக்கிய காசுக் கணக்கு மீதி வரவு (ரு.' 000) |
|---|---|---|
| (1) | 350 | 410 |
| (2) | 350 | 360 |
| (3) | 350 | 510 |
| (4) | 450 | 410 |
| (5) | 450 | 510 |

(......)

10. இனியா ரேடர்ஸ் ஆனது 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கு மொத்த இலாபமாக ரு. 250 000 இனையும் தேறிய இலாபமாக ரு. 180 000 இனையும் கொண்டுள்ளது. இனியா ரேடர்ஸ் ஆனது கிரயத்தில் 25% இலாபம் வைத்துப் பொருட்களை விற்பனை செய்கிறது. 2025 மார்ச் மாதத்தில் இவ்வணிகமானது ரு. 15 000 கிரயமான பொருட்களை 'விற்பனை அன்றேல் திருப்புக' என்ற அடிப்படையில் அனுப்பியது எனினும், இப்பொருட்களின் முழு விற்பனைப் பெறுமதியும் வணிகத்தினால் தவறுதலாக விற்பனை வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இவற்றுள், ரு. 5 000 கிரயமான பொருட்கள் 31.03.2025 இலுள்ளவாறு விற்பனையாகாமல் இருந்ததுடன், இதற்கான எதுவித சீராக்கப் பதிவுகளும் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வணிகத்தின் 31.03.2025 இலுள்ளவாறான இறுதி இருப்பானது பௌதீக இருப்பின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளதுடன் இது விற்பனையாகாமல் இருந்த பொருட்களை உள்ளடக்கவில்லை.

31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் :

| | மொத்த இலாபம் (ரு.) | தேறிய இலாபம் (ரு.) |
|---|---|---|
| (1) | 238 750 | 168 750 |
| (2) | 248 750 | 173 750 |
| (3) | 248 750 | 178 750 |
| (4) | 248 750 | 180 000 |
| (5) | 261 250 | 191 250 |

(......)

[பக். 4 ஐப் பார்க்க

**11.** வரையறுக்கப்பட்ட மிதுன் (தனியார்) கம்பனியானது உற்பத்தி வணிகமொன்றை நடாத்தி வருகின்றது. 2025 ஜனவரி மாதத்துக்கான இவ்வணிகத்துடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு.

| | ரூ.' 000 |
|---|---|
| மூலப்பொருட் கொள்வனவுகள் | 750 |
| உட்காவுகைகள் | 20 |
| 01.01.2025 இல் உள்ளவாறான மூலப்பொருள் இருப்பு | 80 |
| 31.01.2025 இல் உள்ளவாறான மூலப்பொருள் இருப்பு | 50 |
| நேர் ஊழியம் | 300 |
| ஏனைய நேர்க்கிரயங்கள் | 40 |
| தொழிற்சாலை மேந்தலைகள் | 400 |
| 2025 ஜனவரி மாதத்தில் நடைமுறைவேலை இருப்பில் அதிகரிப்பு | 50 |

**மேலதிக தகவல்:**

- நடைமுறைவேலை இருப்பினை உற்பத்திக் கிரயத்தில் அளவீடு செய்வது கம்பனியின் கொள்கையாகும்.

2025 ஜனவரி மாதத்துக்கான மூலக்கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம்

| | மூலக்கிரயம் (ரூ.' 000) | மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 1 080 | 1 430 |
| (2) | 1 100 | 1 450 |
| (3) | 1 100 | 1 550 |
| (4) | 1 140 | 1 490 |
| (5) | 1 140 | 1 590 |

(......)

**12.** நேரு வணிகமானது கணக்கீட்டுப் பதிவுகளை முறையாகப் பேணவில்லை. 31.03.2025 மற்றும் 31.03.2024 இல் உள்ளவாறான வணிகத்தின் இருப்பு மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 31.03.2025 இல் உள்ளவாறு (ரூ.' 000) | 31.03.2024 இல் உள்ளவாறு (ரூ.' 000) |
|---|---|---|
| இருப்புக்கள் | 50 | 30 |
| வியாபாரக் கடன்பட்டோர் | ? | 190 |

வணிகத்தின் அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகமானது விற்பனை விலையின் 25% மொத்த இலாப எல்லையைப் பேணி வருகின்றது. 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான மொத்தக் காசுப் பெறுவனவுகள் மற்றும் விற்பனைக் கிரயம் என்பன முறையே ரூ. 470 000 மற்றும் ரூ. 300 000 ஆகும்.

31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான கொள்வனவுகள் மற்றும் 31.03.2025 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் மீதி:

| | கொள்வனவுகள் (ரூ.' 000) | வியாபாரக் கடன்பட்டோர் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 300 | 95 |
| (2) | 300 | 260 |
| (3) | 320 | 120 |
| (4) | 320 | 260 |
| (5) | 350 | 120 |

(......)

**13.** பங்குடமையொன்றின் நன்மதிப்பு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை?

A - பங்குடமையொன்றின் உடமையில் மாற்றம் ஏற்படும் போது நன்மதிப்பானது மதிப்பிடப்படுகின்றது.

B - பங்காளர்களின் இலாபம் அல்லது நட்டப்பகிர்வு விகிதத்தில் மாற்றமேற்படும் போது நன்மதிப்பானது மதிப்பிடப்படுகின்றது.

C - 1890 இன் பங்குடமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கமைய நன்மதிப்பானது மதிப்பீடு செய்யப்படுகின்றது.

D - நன்மதிப்பானது பங்காளர்களின் உரிமையாண்மையூடாகச் சீராக்கப்படுகின்றது.

(1) A, B மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) C, D மாத்திரம்
(4) A, B, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன யாவும் (......)

- **14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

சாந்தன், ராமன், வாசன் ஆகிய மூவரும் முறையே 5 : 3 : 2 என்றவாறு இலாபநட்டங்களைப் பகிர்ந்துகொண்டு பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர். 01.04.2024 இல் உள்ளவாறு பங்குடமையின் பின்வரும் கணக்கு மீதிகள் இருந்தன.

| | சாந்தன் (ரூ.'000) | ராமன் (ரூ.'000) | வாசன் (ரூ.'000) |
|---|---|---|---|
| மூலதனக் கணக்குகள் (செலவு) | 6 000 | 4 000 | 2 000 |
| நடைமுறைக் கணக்குகள் (செலவு) | 800 | 400 | 200 |
| பங்காளர்களால் வழங்கப்பட்ட வட்டியற்ற கடன்கள் | 500 | – | 300 |

பங்குடமையானது 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கு ரூ. 1 000 000 தேறிய இலாபத்தை ஈட்டியது. 31.03.2025 இல் வாசன் பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு மதிப்பிடப்பட்டதுடன், அது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கப்பட்டது. இளைப்பாறும் போது வாசனுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை அவரது கடன் உள்ளடங்கலாக ரூ. 3 000 000 ஆக இருந்தது. இத் தொகையை கடன் கணக்கொன்றுக்கு மாற்றுவதென இணங்கிக் கொள்ளப்பட்டது. சாந்தனும் ராமனும் இலாப நட்டங்களை முறையே 3 : 2 என்றவாறு பகிர்ந்து புதிய பங்குடமையாக வணிகத்தைத் தொடர இணங்கினர்.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**14.** 31.03.2025 இல் மதிப்பிடப்பட்ட பங்குடமையின் நன்மதிப்பு (ரூ.'000):
(1) 1 500 (2) 2 500 (3) 3 000 (4) 3 500 (5) 4 000 (......)

**15.** வாசன் இளைப்பாறிய பின்னர் 31.03.2025 இல் உள்ளவாறான பங்குடமையின் உரிமையாண்மை (ரூ.'000):
(1) 9 700 (2) 10 900 (3) 11 700 (4) 11 800 (5) 11 900 (......)

- **16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

றுவான் PLC இன் வரைபு நிதிக்கூற்றுக்களின்படி 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம் என்பன முறையே ரூ. 8 500 000 மற்றும் ரூ. 6 000 000 ஆகும்.
நடைமுறை வருடத்தில் காணியும் இயந்திரங்களும் முதல் தடவையாகவும் மோட்டார் வாகனங்கள் இரண்டாவது தடவையாகவும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. நடைமுறை வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட இம்மீள்மதிப்பீடுகளினால் ஏற்பட்ட மிகையும் குறைவும் பின்வருமாறு.

**மீள்மதிப்பீட்டு மிகை / (குறைவு) (ரூ.'000)**

| | |
|---|---|
| காணி | 2 000 |
| இயந்திரங்கள் | (1 000) |
| மோட்டார் வாகனங்கள் | (1 500) |

வரைபு நிதிக்கூற்றினைத் தயார்செய்யும் போது காணி மீள்மதிப்பீட்டு மிகையானது இலாபம் அல்லது நட்டக் கணக்கில் ஏனைய வருமானத்தினுள் இனங்காணப்பட்டிருந்ததுடன், மேற்குறித்த இரண்டு மீள்மதிப்பீட்டுக் குறைவுகளும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.
மோட்டார் வாகனங்கள் 31.03.2023 இல் முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போது ஏற்பட்ட மிகை ரூ. 1 200 000 சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**16.** 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான சரியான ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000):
(1) (1 000) (2) 500 (3) 800 (4) 2 000 (5) 3 200 (......

**17.** 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான சரியான இலாபம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம்

| | வருடத்திற்கான இலாபம் (ரூ.' 000) | மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 5 200 | 6 000 |
| (2) | 5 500 | 4 500 |
| (3) | 6 200 | 6 000 |
| (4) | 6 500 | 5 700 |
| (5) | 7 500 | 8 500 |

(.....

**18.** கமலன் PLC ஆனது 01.04.2024 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பனி கணினிகளை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது. கம்பனி பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்வரும் கிரயங்கள் 31.03.202 இல் முடிவடைந்த வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கணினிகளுக்கு ஏற்பட்டிருந்தன.

| | ரூ.' 000 |
|---|---|
| கணினிகளின் கொள்வனவு விலை | 55 000 |
| சுங்கத் தீர்வையும் காப்புறுதியும் | 10 000 |
| இறக்குமதித் தீர்வைகள் | 15 000 |
| VAT | 12 000 |
| களஞ்சியக் கிரயம் | 18 000 |
| கணினிகளின் இறக்குமதியுடன் தொடர்புடைய நிர்வாக மேந்தலைகள் | 10 000 |

**மேலதிக தகவல்கள்:**
- 31.03.2025 இல் இக்கணினிகளில் 80% ஆனவை விற்பனை செய்யப்படாது மீதியாக இருந்தன.

'LKAS 2 - இருப்புகள்' இன்படி 31.03.2025 இல் உள்ளவாறான இருப்புகளின் கிரயம் (ரூ.'000)
(1) 64 000 (2) 73 600 (3) 80 000 (4) 88 000 (5) 96 000 (....

**19.** 'LKAS 7- காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
A - பெற்றவட்டி முதலீட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படலாம்.
B - செலுத்திய வட்டி செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படலாம்.
C - பெற்ற பங்குலாபம் செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படலாம்.
D - செலுத்திய பங்குலாபம் நிதியிடல் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படலாம்.
(1) A, B மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) B, C மாத்திரம்
(4) A, B, C மாத்திரம் (5) A, B, C, D ஆகியன யாவும் (...

**20.** நித்தியா PLC இன் 01.04.2024 இல் உள்ளவாறான மொத்த உரிமையாண்மை ரூ. 9 500 000 ஆக இருந்த பின்வரும் தகவல்கள் 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையனவாகும்.

| | ரூ.'000 |
|---|---|
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | 5 500 |
| 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் மூலதனமாக்கப்பட்ட நிறுத்திவைத்த வருவாய்கள் | 2 000 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்குலாபங்கள் | 800 |
| 15.04.2025 இல் சாதாரண பங்குதாரர்களுக்குப் பிரேரிக்கப்பட்ட இறுதிப் பங்குலாபம் | 1000 |

மேலே தரப்பட்ட தகவல்களைக் கருத்திற்கொண்ட பின்னர் 31.03.2025 இல் உள்ளவாறான சரியான மொ உரிமையாண்மை (ரூ.'000)
(1) 8 700 (2) 11 200 (3) 12 200 (4) 13 200 (5) 14 200 (...

● 21, 22 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
சுரேஷ் PLC ஆனது நிர்மாணித்தலுக்கு விசேட அறிவு தேவைப்படும் விசேட வகையான மின்பிறப்பாக்கிகளை விற்பனை செய்கின்றது. அதற்கமைய மின்பிறப்பாக்கிகளின் நிர்மாணமானது சுரேஷ் PLC இனால் மட்டுமே செய்யப்படுகின்றது. மேலும், மின்பிறப்பாக்கிகளை நிர்மாணித்து ஒன்பது மாதங்களின் பின்னர் பராமரிப்புச் சேவையொன்று தேவைப்படுகின்றது. இப்பராமரிப்புச் சேவையானது சந்தையிலுள்ள எந்த மின்பிறப்பாக்கி விநியோகத்தராலும் வழங்கப்படலாம். 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் இக்கம்பனியால் விற்பனை செய்யப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட மின் பிறப்பாக்கிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | எண்ணிக்கை | அலகொன்றுக்கான விதிக்கப்பட்ட விலை (ரூ.' 000) |
|---|---|---|
| விற்பனை செய்யப்பட்ட மின்பிறப்பாக்கிகள் | 28 | 2 500 |
| நிர்மாணிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகள் | 24 | 500 |
| பராமரிப்புச் சேவைகள் முடிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகள் | 12 | 400 |

21. 'SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்' இன்படி 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட வேண்டிய மொத்த வருவாய் (ரூ.'000).
(1) 72 000 (2) 76 800 (3) 86 800 (4) 90 000 (5) 94 800 (......)

22. பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன.
● வாடிக்கையாளரொருவர் இக்கம்பனியிலிருந்து மின்பிறப்பாக்கிகளைக் கொள்வனவு செய்து பராமரிப்புச் சேவையையும் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அலகு விலையில் அல்லது விதிக்கப்பட்ட விலையில் 10% கழிவு வழங்கப்படும்.
● இவ்வருடத்தில் 24 மின்பிறப்பாக்கிகள் விற்பனை செய்யப்பட்டும், நிர்மாணிக்கப்பட்டும் இருந்தன. இவற்றுள் 10 மின்பிறப்பாக்கிகள் கழிவுடன் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எனினும் வருட முடிவில் இவற்றில் 06 மின்பிறப்பாக்கிகளுக்கு மட்டுமே பராமரிப்புச் சேவை வழங்கப்பட்டிருந்தது.

'SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்' இன்படி கழிவு கருத்திற்கொள்ளப்படும் போது 31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கான இனங்காணப்பட்ட மொத்த வருவாய் (ரூ.'000)
(1) 73 560 (2) 76 800 (3) 83 560 (4) 85 560 (5) 86 800 (......)

● 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
இந்துஜன் PLC ஆனது 1 000 000 சாதாரண பங்குகளை வழங்கி 01.04.2024 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில் 5% வருடாந்த வட்டியில் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டன. கம்பனியில் இதற்கு மேலதிகமாக வேறு நீண்டகாலப் பொறுப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. பின்வரும் தகவல்கள் நடைமுறைக் கணக்கீட்டுக் காலத்துடன் தொடர்பானவை.

| | ரூ.' 000 |
|---|---|
| **31.03.2025 இலுள்ளவாறு:** | |
| மொத்தச் சொத்துகள் | 21 000 |
| மொத்த உரிமையாண்மை | 12 000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 3 000 |
| **31.03.2025 இல் முடிவடையும் வருடத்துக்கானது:** | |
| விற்பனைக் கிரயம் | 4 500 |
| வருமானவரிச் செலவு | 540 |

**31.03.2025 இலுள்ளவாறான மேலதிக தகவல்கள்:**

| | |
|---|---|
| உரிமையாண்மை மீதான வருவாய் (ROE) விகிதம் | 18% |
| உரிமையாண்மைக்குக் கடன் விகிதம் | 60% |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 1.25 |

31.03.2025 இலுள்ளவாறு முற்பண அல்லது சென்மதி செலவுகள் எதுவும் இருக்கவில்லை.

23. 31.03.2025 இலுள்ளவாறு பங்கொன்றுக்கான உழைப்பு (EPS):
(1) 1.98 (2) 2.16 (3) 2.70 (4) 3.24 (5) 3.60 (......)

24. இருப்புப் புரள்வு விகிதம் (இறுதி இருப்பு அடிப்படையில்) மற்றும் வட்டிக் காப்பு விகிதம்:

| | இருப்புப் புரள்வு விகிதம் (தடவைகள்) | வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) |
|---|---|---|
| (1) | 5.5 | 6.5 |
| (2) | 6.0 | 5.5 |
| (3) | 6.0 | 8.5 |
| (4) | 8.5 | 6.0 |
| (5) | 12.0 | 8.5 |

(......)

25. கிரயங்களின் வகைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் சமன்பாடுகளில் சரியானவை எவை?
A - மொத்த மாறும் கிரயம் = நேர் மூலப்பொருட் கிரயம் + மாறும் நேர் ஊழியக் கிரயம் + மாறும் ஏனைய நேர் கிரயங்கள் + மாறும் உற்பத்தி மேந்தலைகள் + மாறும் உற்பத்தியல்லா மேந்தலைகள்
B - மொத்தக் கிரயம் = மூலக்கிரயம் + உற்பத்தி மேந்தலைகள் + உற்பத்தியல்லா மேந்தலைகள்
C - மொத்தக் கிரயம் = நேர் மூலப்பொருட் கிரயம் + நேர் ஊழியக் கிரயம் + ஏனைய நேர்க்கிரயங்கள் + மொத்த மேந்தலைகள்
D - மொத்த நிலையான கிரயங்கள் = நிலையான நேர் ஊழியக் கிரயம் + நிலையான ஏனைய நேர் கிரயங்கள் + நிலையான உற்பத்தி மேந்தலைகள் + நிலையான உற்பத்தியல்லா மேந்தலைகள்
(1) A, D மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன யாவும் (......)

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**26.** கம்பனியொன்றின் சம்பளப்பட்டியலானது வெள்ளத்தினால் முற்றாக அழிவடைந்துள்ளது. இதனால் 30.06.2025 இல் முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் தகவல்களை மட்டுமே கம்பனியினால் பெறக்கூடியதாக இருந்தது.

- 2025 யூன் மாதத்திற்காகச் செலுத்திய ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியின் (ETF) மொத்தத் தொகை ரூ. 168 000 ஆகும்.
- 2025 யூன் மாதத்திற்கான ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப்படியின் மொத்தம் ரூ. 120 000 ஆகும். ஊழியர்களினால் பெறப்பட்ட ஒரே ஒரு படி இது மட்டுமேயாகும்.
- 2025 யூன் மாதத்திற்கான ஊழியர் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட நலன்புரிச் சங்கத்திற்கான மொத்தச் சந்தா ரூ. 40 000 ஆகும்.

மேலதிக தகவல்கள்:

- வேலை கொள்வோர், ஊழியர் EPF இற்கான பங்களிப்புக்கள் முறையே 15% மற்றும் 10% ஆகும்.
- ETF இற்கான வேலை கொள்வோர் பங்களிப்பு 3% ஆகும்.
- EPF மற்றும் ETF என்பன ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புக்கள் கணிக்கப்படுகிறது.

30.06.2025 இல் முடிவடைந்த மாதத்திற்கான ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் மொத்தக் கழிப்பனவுகள்

| | அடிப்படைச் சம்பளம் (ரூ.' 000) | மொத்தக் கழிப்பனவுகள் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 480 | 60 |
| (2) | 480 | 100 |
| (3) | 600 | 60 |
| (4) | 600 | 100 |
| (5) | 720 | 168 |

(.....)

**27.** பின்வரும் கூற்றுக்களில் மேந்தலைக் கிரயங்கள் தொடர்பில் சரியானவை எவை?

A - மாறும் மேந்தலைகளானவை உற்பத்திப் பொருளுடன் நேரடியாக இனங்காண முடியாதவையாகும்.

B - கிரய நிலையங்களிற்குச் சேகரிக்கப்பட்ட மேந்தலைகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில் கிரய அலகிற்குச் சாட்டுதல் செய்தல் மேந்தலை ஒதுக்குதல் எனப்படும்.

C - உற்பத்தியல்லா மேந்தலைகளானவை மூலக்கிரயத்தின் ஒரு விகிதாசாரமாக மட்டுமே உற்பத்திப் பொருட்களினால் உறிஞ்சப்படல் வேண்டும்.

D - பொதுவாக ஏற்படும் உற்பத்தி மேந்தலைகளானவை கிரய நிலையங்களுக்கிடையே பொருத்தமான அடிப்படையைப் பயன்படுத்தி பகிரப்படுகின்றன.

(1) A, B மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) C, D மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (.....)

**28.** உற்பத்திப் பொருளொன்றின் கிரயம் - தொகை - இலாபப் பகுப்பாய்வு என்பன தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

A - சமப்பாட்டுப் புள்ளியை அடையும் முன்னர் மொத்த மாறும் கிரயமானது மொத்த வருமானத்திலும் விட உயர்வாக இருக்கும்.

B - சமப்பாட்டுப் புள்ளியில் மொத்தப் பங்களிப்பானது மொத்த நிலையான கிரயத்திற்குச் சமமாக இருக்கும்.

C - பாதுகாப்பு எல்லையின் வீச்சு எல்லையினுள் இலாபமானது உழைக்கப்படுகின்றது.

D - மொத்த வருமானமானது மொத்தப் பங்களிப்பு மற்றும் மொத்த மாறும் கிரயங்களின் கூட்டுத்தொகைக்கு சமமாகும்.

(1) A, B மாத்திரம் (2) B, D மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன யாவும் (.....)

**29.** சிந்து PLC ஆனது தனி உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதுடன் அதன் வருடாந்த இயலளவு மட்டமானது 5 000 அலகுகள் ஆகும். பின்வரும் தகவல்கள் இப்பொருளுடன் தொடர்புடையவை.

- 1 000 அலகுகள் மற்றும் 2 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயமானது முறையே ரூ. 200 000 மற்றும் ரூ. 250 000 ஆகும்.
- விற்பனைக்குப் பங்களிப்பு விகிதம் 60% ஆகும்.
- செயற்பாட்டு மட்டம் 2 500 அலகுகளை விட அதிகரிக்குமாயின், கம்பனியானது ரூ. 50 000 மேலதிக நிலையான கிரயத்தினை ஏற்றுக்கொள்ள நேரிடும்.

3 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அலகொன்றிற்கான மாறும் கிரயம் மற்றும் இலாபம் / நட்டம்

| | அலகொன்றிற்கான மாறும் கிரயம் (ரூ.) | இலாபம் / (நட்டம்) (ரூ.) |
|---|---|---|
| (1) | 50 | 25 000 |
| (2) | 50 | 50 000 |
| (3) | 50 | (25 000) |
| (4) | 75 | 50 000 |
| (5) | 75 | (50 000) |

(.....)

[பக். 8 ஐப் பார்க்க

30. நீண்டகால முதலீட்டுச் செயற்றிட்டமொன்றினை மதிப்பீடு செய்வது தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
A - செயற்றிட்டமொன்றின் ஆரம்ப முதலீட்டின் பெறுமதியானது அதன் நிகழ்காலப் பெறுமதிக்குச் சமமானது.
B - செயற்றிட்டமொன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியானது பூச்சியமாக இருக்கும்போது அது அதன் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதத்திற்குச் சமமான வருமானத்தை உருவாக்கும்.
C - செயற்றிட்டமொன்றிற்காக நிகழ்காலத்தில் பெறப்படும் காசானது எதிர்காலத்தில் பெறப்படும் அதேயளவு காசை விடப் பெறுமதி கூடியதாகும்.
D - செயற்றிட்டமொன்றானது தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்போது, அச்செயற்றிட்டத்தின் ஆரம்ப முதலீட்டுத் தொகையானது மீளப் பெறப்படும் வரை தேறிய காசு உட்பாய்ச்சலினை மட்டும் கருத்திற் கொள்கிறது.
(1) A, B மாத்திரம் (2) B, C மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன யாவும் (……)

● 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.

31. நிறுவனமொன்றின் அக்கறையுடைய தரப்பினரால் பொது நோக்குடைய நிதிக்கூற்றுக்களிலிருந்து தகவல்களைப் பெறுவதற்கான பல்வேறு நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - நிறுவனத்தின் இலாபகரத்தன்மையை மதிப்பீடு செய்தல்
B - தனது கடன்களைத் தீர்ப்பதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்தல்
C - நிறுவனத்தின் மீது வருமான வரியை அமுலாக்குதல்
D - நம்பகரமான சேவைகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்தல்
பின்வரும் பட்டியலிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நோக்கத்துக்காகவும் கணக்கீட்டுத் தகவல்களைப் பிரதானமாகப் பயன்படுத்தும் அக்கறையுடைய தரப்பினரைத் தெரிவுசெய்க.
(1) வாடிக்கையாளர் (2) அரசாங்கம் (3) முதலீட்டாளர்கள் (4) கடன் வழங்குநர்

| நோக்கம் | அக்கறையுடைய தரப்பினர் | நோக்கம் | அக்கறையுடைய தரப்பினர் |
|---|---|---|---|
| A | ……………………… | C | ……………………… |
| B | ……………………… | D | ……………………… |

32. மதன் வணிகமானது 31.03.2024 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இவ்வணிகமானது ரூ. 400 000 வங்கிக்கடன் ஒன்றினால் முழுமையாக நிதியிடப்பட்டுள்ளது. 31.03.2025 இல் உள்ளவாறு பின்வரும் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை மீதிகள் காணப்பட்டன.

| சொத்துக்கள் (ரூ.'000) | பொறுப்புக்கள் (ரூ.'000) | உரிமையாண்மை (ரூ.'000) |
|---|---|---|
| 575 | 300 | 275 |

பின்வரும் தகவல்கள் 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கானவையாகும்.
● இவ்வருடத்தில் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 500 000 ஆல் அதிகரித்திருந்தன. இது உரிமையாளரால் ஈடுபடுத்தப்பட்ட ரூ. 200 000 மூலதனத்தினையும் உள்ளடக்கியுள்ளது.
● பற்றுக்கள் ரூ. 25 000, வங்கிக்கடன் மீள்கொடுப்பனவு (மூலதனப் பகுதி) ரூ. 100 000 மற்றும் வணிகத்தின் செலவுகள் என்பன காரணமாக இவ்வருடத்தில் உரிமையாளரின் மொத்தச் சொத்துக்கள் குறைவடைந்திருந்தன.
● மேலே குறிப்பிட்டுள்ள கொடுக்கல் வாங்கலைத் தவிர இவ்வருடத்தில் பொறுப்புக்கள் தொடர்பில் வேறெந்தக் கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.
பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.
(அ) 31.03.2024 இல் உள்ளவாறான சொத்துக்கள் (ரூ.'000) : ……………………………
(ஆ) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் (ரூ.'000) : ……………………………
(இ) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான செலவுகள் (ரூ.'000) : ……………………………

● 33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் பெரியளவு வெங்காய அறுவடையில் ஈடுபடும் வணிகமொன்றில் மேற்கொள்ளப்பட்டவையாகும்.
A - விதை விநியோகத்தரான அமலிடமிருந்து ரூ. 800 000 இற்குக் கடனுக்கு வெங்காய விதைகள் கொள்வனவு செய்யப்பட்டன.
B - சிறிதரன் PLC இடமிருந்து ரூ. 2 300 000 இற்கு அறுவடை இயந்திரமொன்று கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
C - நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ரூ. 100 000 கூலிகள் செலுத்தப்பட்டன.
D - வெங்காயங்கள் மொத்த வியாபாரிகளுக்கு ரூ. 980 000 இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. இதன்பொருட்டு ரூ. 200 000 காசு பின்னர் பெறப்பட்டது. மீதித்தொகை ஒரு மாத காலத் தவணையில் கிடைக்கவுள்ளது.
E - வெங்காய இருப்பு அமலுக்கு ரூ. 280 000 இற்குக் கடனுக்கு விற்கப்பட்டதுடன், இத்தொகையானது கொள்வனவு செய்யப்பட்ட வெங்காய விதைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஒரு பகுதித் தொகைக்கெதிராக எதிரீடு செய்வதென இணங்கிக் கொள்ளப்பட்டது.
F - அமலுக்கான மீதித்தொகை செலுத்தப்பட்டது.


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**33.** மேலுள்ள **A, B, C, D** ஆகிய கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடுகளைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | மூலப்பதிவேடு / கள் |
|---|---|
| **A** | ................................................................................................ |
| **B** | ................................................................................................ |
| **C** | ................................................................................................ |
| **D** | ................................................................................................ |

**34.** பின்வருவனவற்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான இரட்டைப் பதிவுகளை எழுதுக.
(அ) நிறுவனத்தின் விற்பனை நாளேட்டின் மொத்தத்தைப் பொதுப்பேரேட்டுக்கு மாற்றுதல்
(ஆ) அமலுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையைத் தீர்த்தல்

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் விற்பனை நாளேட்டின் மொத்தத்தைப் பொதுப் பேரேட்டுக்கு மாற்றுதல்: | | |
| (ஆ) அமலுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையைத் தீர்த்தல்: | | |

**35.** நிறுவனமொன்றின் பொதுப்பேரேட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான நிதிக்கூற்றுக்களின் மூலத்தைக் குறிப்பிடுக.

| கணக்கு | நிதிக்கூற்றுக்களின் மூலம் |
|---|---|
| A - உட்காவுகைகள் | .............................. |
| B - உட்திருப்பங்கள் | .............................. |
| C - சொத்து மீள்மதிப்பீட்டு மிகை | .............................. |
| D - உத்தரவாதத்துக்கான ஏற்பாடு | .............................. |

**36.** உற்பத்தி நிறுவனமொன்றின் பின்வரும் ஒவ்வொரு நிலைமைகளுக்கும் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

| நிலைமை | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| A - உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் இயந்திரத்திற்கான பெறுமானத்தேய்வினைச் செலவொன்றாக இனங்காணல் | .............................. |
| B - பொது நோக்குடைய நிதிக் கூற்றுக்களை வருடாந்தம் தயாரித்தல் | .............................. |
| C - வருடமொன்றில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிப்புச் செய்வதற்கு நிதிக்கூற்றுக்களில் குறிப்பினைத் தயாரித்தல் | .............................. |
| D - நிலுவையிலுள்ள வழக்கொன்றின் காரணமாக நிறுவனத்திற்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் ரூ. 500 000 இழப்பீட்டினை இனங்காணாமல் விடுதல் | .............................. |

**37.** விளையாட்டுக்கழகமொன்றில் 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளன.

A - விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 30.11.2024 இல் ரூ. 300 000 நன்கொ பெறப்பட்டது. இது விளையாட்டு உபகரண அன்பளிப்பு நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

B - இந்த நன்கொடையினைப் பயன்படுத்தி 01.01.2025 இல் காசுக்கு ரூ. 200 000 பெறுமதியான விளையா உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த உபகரணத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்கா 5 வருடங்களாகும்.

C - இந்த நன்கொடையினைப் பயன்படுத்தி இன்னுமொரு விளையாட்டு உபகரணத்தைக் கொள்வனவு செய்வ 25.03.2025 இல் ரூ. 50 000 முற்பணம் செலுத்தப்பட்டது. இந்த விளையாட்டு உபகரணமானது விளையா கழகத்தினால் 05.04.2025 இல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த ஒரு நிதியாண்டில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் நன்கொடையின் அளவுக் சமமான தொகையை நன்கொடை வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான விளையாட்டு உபகரணத்தின் பெறுமானத் தேய்வையும் வருமான இனங்காணப்பட்ட நன்கொடையையும் பதிவு செய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
| --- | --- | --- |
| (1)<br><br>(31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான விளையாட்டு உபகரணத்தின் பெறுமானத் தேய்வு) | | |
| (2)<br><br>(31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட நன்கொடைகள்) | | |

- **38, 39 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அமலனும் விமலனும் இலாப நட்டங்களை முறையே 5 : 3 என்னும் விகிதத்தில் பகிர்ந்து பங்குடமையொன்றினை நடாத்தினர். சீலன் என்பவர் 01.04.2024 இல் புதிய பங்காளராகச் சேர்க்கப்பட்டார். இத்திகதியில், பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 2 400 000 ஆக மதிப்பிடப்பட்டு, பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கப்பட்டது.

புதிய பங்குடமையில் இலாப நட்டங்கள் அமலன், விமலன், சீலன் ஆகியோருக்கிடையில் முறையே 3 : 2 : 1 என்னும் விகிதத்தில் பகிரப்படுகின்றது.

31.03.2025 இலுள்ளவாறு மூன்று பங்காளர்களினதும் மூலதனக் கணக்கு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | அமலன் (ரூ.'000) | விமலன் (ரூ.'000) | சீலன் (ரூ.'000) |
| --- | --- | --- | --- |
| மூலதனக் கணக்கு மீதி | 8 700 | 6 600 | 3 600 |

31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் இலாபம் ரூ. 2 820 000 ஆக இருந்தது. ஒவ்வொரு பங்காளரும் நன்மதிப்பினைச் சீராக்கிய பின்னருள்ள மூலதன மீதியில் 10% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவர்.

**38.** நன்மதிப்பினைச் சீராக்க முன்னர் 01.04.2024 இலுள்ளவாறான அமலன் மற்றும் விமலனின் மூலதனக் கணக்கு மீதிகள் மற்றும் 01.04.2024 இல் சீலனால் பங்களிப்பு செய்யப்பட்ட தொகை

(அ) அமலன் (ரூ.'000) : ............................ (ஆ) விமலன் (ரூ.'000) : ............................

(இ) சீலன் (ரூ.'000) : ............................

**39.** 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான அமலன் மற்றும் விமலனின் இலாபப் பங்குகள்

(அ) அமலன் (ரூ.'000) : ............................ (ஆ) விமலன் (ரூ.'000) : ............................

**40.** நிதி அறிக்கையிடலிற்கான எண்ணக்கருச் சட்டகம் (2018) இன் படி பின்வரும் கூற்றுகளைப் பூரணப்படுத்துக.

A - அறிக்கையிடும் நிறுவனமானது ............................................................ என்ற எடுகோளின் அடிப்படையில் பொதுவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கின்றது.

B - செலவு என்பது உரிமையாண்மையில் கோரிக்கைகள் கொண்டுள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டவை தவிர உரிமையாண்மையில் குறைவினை ஏற்படுத்தும் ........................ குறைவு அல்லது ........................ அதிகரிப்பு ஆகும்.

C - நிதித் தகவல்கள் உண்மையாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளன என சுதந்திரமான அவதானிப்பாளர்கள் ஒருமித்த கருத்தினைக் கொண்டுள்ளபோது ........................ எனும் 'மேம்படுத்தும் தர ரீதியான பண்பு' அடையப்படுகின்றது.

**41.** 'LKAS 1 - நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்' இன்படி பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றும் உண்மை (T) அல்லது பொய் (F) எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை / பொய் |
| --- | --- | --- |
| A - | நிறுவனமொன்று நிதிக்கூற்றுக்கள் முழுவதனையும் ஆகக்குறைந்தது வருடந்தோறும் சமர்ப்பித்தல் வேண்டும். | ............... |
| B - | இன்னொரு நியமத்தினால் கோரப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி, நிறுவனமொன்று அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது வருமானத்தையும் செலவுகளையும் எதிரீடு செய்யக்கூடாது. | ............... |
| C - | நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் வெளிப்படுத்துவதன் மூலம் நிறுவனமொன்று பொருத்தமற்ற கணக்கீட்டுக் கொள்கைகளைத் திருத்திக்கொள்ளலாம். | ............... |
| D - | ஏனைய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களால் வேண்டப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவாறு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படாத வருமானம் மற்றும் செலவுகளை ஏனைய முற்றுமடங்கிய வருமானமானது உள்ளடக்கியுள்ளது. | ............... |

[பக். 11 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**42.** ரூபன் PLC உடன் தொடர்புடைய நிலுவையிலுள்ள இரண்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தகவல்கள் 31.03.2025 இல் உள்ளவாறு கீழே தரப்பட்டுள்ளன.

A - வேலையிலிருந்து நீக்கிய போது ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக முன்னைய ஊழியர் ஒருவர் ரூ. 8 000 000 இழப்பீட்டைக்கோரி கம்பனிக்கெதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். கம்பனி வழக்கறிஞரின் அபிப்பிராயத்தின்படி இவ்வழக்கில் கம்பனி தோல்வியடைவதற்கான உயர் சாத்தியத்தன்மை காணப்படுவதுடன், கம்பனி இழப்பீடாக ரூ. 6 000 000 ஐச் செலுத்த வேண்டி ஏற்படுமென மதிப்பிடப்பட்டது.

B - தரங்குறைந்த மூலப்பொருட்களை வழங்கியமைக்காக கம்பனியானது விநியோகத்தர் ஒருவருக்கெதிராக ரூ. 5 000 000 இழப்பீட்டைக் கோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது. கம்பனி வழக்கறிஞரின் அபிப்பிராயப்படி இவ்வழக்கில் கம்பனி வெற்றிபெறுவதற்கான உயர் சாத்தியத்தன்மை காணப்படுகிறது.

'LKAS 37 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்' இன்படி மேலே குறிப்பிடப்பட்ட வழக்குகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளைப் பூரணப்படுத்துக.

A - ரூபா ........................ ஏற்பாடொன்று 31.03.2025 இல் உள்ளவாறான ரூபன் PLC இன் நிதிநிலைமைக்கூற்றில் ........................ வேண்டும்.

B - ரூ. 5 000 000 ........................ ஒன்று ரூபன் PLC இன் நிதிக்கூற்றுக்களுக்கான ........................ இல் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**43.** 'SLFRS 16 - குத்தகை' இன்படி பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றும் உண்மை (T) அல்லது பொய் (F) எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை/ பொய் |
|---|---|---|
| A - | குத்தகையைத் தொடங்கும் திகதியில் குத்தகையாளன் சொத்துப் பாவனை உரிமையைக் கிரயத்தில் அளவீடு செய்தல் வேண்டும். | ............... |
| B - | குத்தகையைத் தொடங்கும் திகதியில் குத்தகையாளன் குத்தகைப் பொறுப்பைக் கிரயத்தில் அளவீடு செய்தல் வேண்டும். | ............... |
| C - | குத்தகையைத் தொடங்கிய திகதிக்குப் பின்னர் குத்தகையாளன் கிரய மாதிரி அல்லது மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பிரயோகித்துச் சொத்துப் பாவனை உரிமையை அளவீடு செய்ய முடியும். | ............... |
| D - | குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்தின் உடமையானது குத்தகைக்கால முடிவில் குத்தகையாளனுக்கு மாற்றப்படும் போது சொத்துப் பாவனை உரிமையானது அதன் பயன்தரு ஆயுட்கால அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும். | ............... |

**44.** 'LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்' இன்படி பின்வரும் கூற்றுக்களைப் பூர்த்தி செய்க.

A - பெறுமானத்தேய்வானது பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்குமான சொத்தொன்றின் ........................ இன் முறையான ஒதுக்கீடாகும்.

B - சொத்தொன்றின் பெறுமானத்தேய்வானது அச்சொத்து ........................ உள்ளபோது ஆரம்பிக்கப்பட வேண்டும்.

C - சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் ........................ ஆகியவை ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

D - காலப்பகுதி ஒன்றுக்கான பெறுமானத்தேய்வுச் செலவானது இன்னொரு சொத்தின் ........................ இல் உள்ளடக்கப்பட்டாலன்றி அது 'இலாபம் அல்லது நட்டத்தில்' இனங்காணப்படுதல் வேண்டும்.

**45.** பொருத்தமான கணக்கீட்டு விகிதங்களைப் பயன்படுத்தி பின்வரும் கூற்றுக்களைப் பூர்த்தி செய்க.

A - நிறுவனமொன்று கடன் மூலதனத்தில் பெரிதும் தங்கியுள்ளது என்பதை உயர் ........................ விகிதமானது சுட்டிக்காட்டும்.

B - நிறுவனமொன்று அதன் கடன்பட்டோரிடமிருந்து வினைத்திறனாகக் காசைச் சேகரிக்கின்றது என்பதை உ ........................ விகிதமானது சுட்டிக்காட்டும்.

C - நிறுவனமொன்றின் ........................ விகிதமானது அதன் ........................ விடக் குறிப்பிடத்தக்க அ குறைவாக இருக்கும் போது அது நிறுவனம் தனது குறுங்காலப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு இருப்புக்க விற்பனை செய்வதில் தங்கியிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும்.

**46.** பின்வரும் கிரயங்கள் வெதுப்பகம் ஒன்றினால் பெறப்பட்ட விசேட கேக் ஒன்றிற்கான கட்டளை ஒன்று தொடர்பானவை. மேலும் இந்தக் கேக்குக்கான கட்டளையினைப் பெறுவதற்கு ரூ. 120 000 விற்பனை மேம்பா கிரயம் வெதுப்பகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

| கிரய விடயம் | ரூ.'000 |
|---|---|
| மா, சீனி மற்றும் பட்டருக்கான கிரயம் | 550 |
| வெதுப்பக ஊழியர்களுக்கான மேலதிகநேரப் படிகள் | 100 |
| விசேட கேக்குக்கான பொதியிடல் கிரயம் | 50 |

| மேலதிக தகவல்கள்: | ரூ.'000 |
|---|---|
| ● வெதுப்பகத்தின் நிரந்தர ஊழியர்களுக்கான மாதாந்தச் சம்பளம் | 600 |
| ● வெதுப்பகத்தின் மாதாந்த வாடகை | 300 |

இந்தக் கேக் கட்டளைக்கான பின்வரும் ஒவ்வொரு கிரயத்தையும் குறிப்பிடுக.

(அ) ஆழ்ந்த கிரயம் (ரூ.'000) : ........................

(ஆ) மொத்தத் தொடர்புடைய கிரயம் (ரூ.'000) : ........................

(இ) மொத்தத் தொடர்பற்ற கிரயம் (ரூ.'000) : ........................

[பக். 12 ஐப் பா

47. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **உண்மை (T)** அல்லது **பொய் (F)** எனக் குறிப்பிடுக.

| | **கூற்று** | **உண்மை / பொய்** |
|---|---|---|
| A - | நிறுவனமொன்றின் கொள்வனவுத் திணைக்களத்தினால் கொள்வனவு வேண்டுகோள் குறிப்புத் தயார் செய்யப்படுகின்றது. | ............... |
| B - | பணவீக்க சூழ்நிலையில் இருப்பின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு முதல் உள் முதல்வெளி (FIFO) முறையைப் பயன்படுத்தும் போது இருப்பின் கிரயமானது நிறையிடப்பட்ட சராசரி முறையினை விடக்கூடியதாக இருக்கும். | ............... |
| C - | இருப்பு உருப்படியொன்றின் சிக்கனக் கட்டளைத் தொகையானது, அதன் வருடாந்தக் கட்டளைக் கிரயத்தினதும் வருடாந்த இருப்பு வைத்தற் கிரயத்தினதும் மொத்தமானது மிகக் குறைவாக இருக்கையில் காணப்படும் மறு கட்டளைத் தொகையாகும். | ............... |
| D - | பெட்டி அட்டையானது இருப்புக்களின் ஒவ்வொரு உருப்படியினதும் பெறுவனவுகள் வழங்கல்கள் மற்றும் அதன் மீதிகளைத் தொகை (அலகுகளில்) மற்றும் பெறுமதி ஆகியவற்றில் காட்டும் ஆவணமாகும். | ............... |

48. தாசன் PLC என்பது உற்பத்திக் கம்பனியொன்றாகும். இது இயந்திரம் மற்றும் ஒன்றுசேர்த்தல் எனும் இரண்டு கிரய நிலையங்களைக் கொண்டுள்ளது. இக்கம்பனியானது தனிப்பொருள் ஒன்றை உற்பத்தி செய்கின்றது. கம்பனியின் 30 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்திலுள்ள தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விற்பனை விலை | அலகொன்றிற்கு ரு. 400 |
| தேறிய இலாப விகிதம் | 25% |
| நேர் மூலப்பொருள் கிரயம் | அலகொன்றிற்கு ரு. 50 |
| நேர் ஊழியக் கிரயம் | அலகொன்றிற்கு ரு. 35 |

| | கிரய நிலையம் - இயந்திரம் | கிரய நிலையம் - ஒன்றுசேர்த்தல் |
|---|---|---|
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரு. 25 | நேர் ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரு. 20 |
| செயன்முறைப்படுத்தும் நேரம் (அலகுக்கான) | 3 இயந்திர மணித்தியாலங்கள் | 2 நேர் ஊழிய மணித்தியாலங்கள் |

- கம்பனியில் ஆரம்ப அல்லது இறுதி இருப்புக்கள் எதுவும் இருக்கவில்லை.

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் (ரு.) : ...........................

(ஆ) 30 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்த உற்பத்திக் கிரயம் (ரு.'000) : ...........................

(இ) 30 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அலகொன்றிற்கான உற்பத்தியல்லா மேந்தலைகள் (ரு.) : ...........................

49. 25 000 அலகுகள் உற்பத்தி இயலளவைக் கொண்ட கம்பனி ஒன்றினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் தனிப்பொருள் ஒன்றுடன் தொடர்புடைய எதிர்வு கூறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விற்பனைக்குப் பங்களிப்பு விகிதம் | 40% |
| பாதுகாப்பு எல்லை (அலகுகளிலும் பெறுமதியிலும்) | 9 000 அலகுகள் மற்றும் ரு. 450 000 |
| மொத்த நிலையான கிரயங்கள் | ரு. 120 000 |

பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) அலகொன்றிற்கான விற்பனை விலை (ரு.) : ...........................

(ஆ) சமப்பாட்டுப்புள்ளி (அலகுகளில்) : ...........................

(இ) 15 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் இலாபம் / (நட்டம்) (ரு.'000) : ...........................

50. கம்பனியொன்று அதன் பழைய இயந்திரமொன்றை மாற்றீடு செய்வதற்கு 10 வருடங்கள் பயன்தரு எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகிறது. இது தொடர்பான எதிர்வு கூறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரு.'000 |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கிரயம் | 12 000 |
| புதிய இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி | 2 000 |
| பழைய இயந்திரத்தின் விற்பனை விலை | 800 |
| பழைய இயந்திரத்தின் விற்பனைச் செலவுகள் | 50 |
| மேலதிக தொழிற்படு மூலதனம் (இது செயற்றிட்டத்தின் இறுதியில் மீளப் பெறப்படும்) | 2 500 |
| புதிய இயந்திரத்தின் காரணமாக வருடாந்த செயற்பாட்டுக் காசு வெளிப்பாய்ச்சலில் ஏற்படும் குறைவு | 1 000 |
| புதிய இயந்திரத்தின் காரணமாக வருடாந்த வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு | 1 250 |

இச் செயற்றிட்டத்திற்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) ஆரம்பத் தேறிய காசு வெளிப்பாய்ச்சல் (ரு.'000) : ...........................

(ஆ) திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்) : ...........................

(இ) மொத்த இறுதியான தேறிய காசு உட்பாய்ச்சல்கள் (ரு.'000) : ...........................

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

12133

උත්තර පත්‍ර පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි

සියලු ම හිමිකම් ඇවිරිණි / (முழுப் பதிப்புரிமையுடையது) / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

**33 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

- ❋ முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❋ ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ❋ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ❋ இவ்வினாத்தாளுக்கு **200** புள்ளிகள் உரித்தாகும்.

**1.** ஜனகன் PLC தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்யும் உற்பத்திக் கம்பனியாகும். இக்கம்பனியானது 01.04.202 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான இக்கம்பனியின் வரைபு வருமான கூற்று பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

**31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு வருமானக் கூற்று :**

| | ரூ.'000 |
|---|---|
| விற்பனை வருவாய் ........................................ | 92 000 |
| விற்பனைக் கிரயம் ........................................ | (40 000) |
| மொத்த இலாபம் ........................................ | 52 000 |
| ஏனைய வருமானங்கள் ........................................ | 4 500 |
| செயற்பாட்டுச் செலவுகள் ........................................ | (32 500) |
| வரிக்குப் பின்னரான இலாபம் ........................................ | 24 000 |

வரைபு வருமானக் கூற்றினைத் தயாரித்ததன் பின்னர் 31.03.2025 இல் உள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீ

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| உற்பத்திப் பொறி - மீள்மதிப்பிடப்பட்ட தொகை .............. | 80 000 | |
| அலுவலக உபகரணங்கள் - கிரயம் .............................. | 50 000 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு : | | |
| உற்பத்திப் பொறி .............................. | | 6 000 |
| அலுவலக உபகரணங்கள் .............................. | | 10 000 |
| சொத்துப் பாவனை உரிமை .............................. | 28 000 | |
| இருப்பு - முடிவுப் பொருட்கள் .............................. | 10 000 | |
| காசு .............................. | 2 500 | |
| வியாபார வருமதிகள் .............................. | 25 800 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் .............................. | | 20 000 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் .............................. | | 125 000 |
| வரிக்குப் பின்னரான இலாபம் .............................. | | 24 000 |
| மீள்மதிப்பீட்டு மிகை .............................. | | 12 500 |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் .............................. | 1 200 | |
| | **197 500** | **197 500** |

மேலதிக தகவல்கள்:

31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் இறுதித் தொகுப்பினைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் தகவல்கள் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(i) வரைபு வருமானக் கூற்றைத் தயார் செய்வதற்குப் பயன்படுத்திய செயற்பாட்டுச் செலவுகளின் உள்ளடக்கம் பின்வருமாறு.

| | ரூ.'000 |
|---|---|
| நிர்வாகச் செலவுகள் | 6 500 |
| விநியோகக் கிரயம் | 6 900 |
| உற்பத்திப் பொறியின் பெறுமானத் தேய்வு | 6 000 |
| அலுவலக உபகரணப் பெறுமானத் தேய்வு | 10 000 |
| தொழிற்சாலைக் கட்டட வாடகை | 2 000 |
| சுயமதிப்பீட்டின்படி செலுத்தப்பட்ட வருமான வரி | 1 100 |
| மொத்தச் செயற்பாட்டுச் செலவுகள் | 32 500 |

மேற்படி செயற்பாட்டுச் செலவுகளுள் சில உற்பத்திச் செலவுகள் உட்பட பல செலவு உருப்படிகள் தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள உற்பத்திக் கிரய அடிப்படையில் கணிக்கப்பட்ட இருப்பானது வரைபு வருமானக் கூற்றைத் தயாரிக்கும் போது தவறுதலாக சில உற்பத்திக் கிரயங்களை உள்ளடக்காததன் காரணமாகப் பிழையாகக் கணிக்கப்பட்டுள்ளது. முடிவுப் பொருள் இருப்பின் கிரயமானது உற்பத்திக் கிரயத்தின் 1/5 இற்குச் சமமாகும். 31.03.2025 இல் உள்ளவாறு மூலப்பொருள் இருப்பு அல்லது நடைமுறை வேலை இருப்பு எதுவும் இருக்கவில்லை.

(iii) 31.03.2025 இல் உள்ளவாறு இயக்குநர் கட்டணங்கள் ரூ. 7 500 000 மற்றும் கணக்காய்வுக் கட்டணம் ரூ. 2 100 000 செலுத்தப்படவோ அல்லது கணக்கிடப்படவோ இல்லை.

(iv) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு:

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எல்லா உருப்படிகளும் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இவை கொள்வனவுத் திகதியிலிருந்து பாவனைக்குத் தயாராக உள்ளன.
- உற்பத்திப் பொறியானது 31.03.2025 இல் அதன் சந்தைப் பெறுமதியான ரூ. 80 000 000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு மிகையானது மீள்மதிப்பீட்டுத் தொகைக்கும் பொறியின் கிரயத்துக்குமிடையிலான வேறுபாட்டை மட்டும் கவனத்திற்கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. இப்பொறியானது 01.04.2024 இல் கொள்வனவு செய்யப்பட்டது. அத்திகதியில் உற்பத்திப் பொறியின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் அதன் எஞ்சிய பெறுமதி முறையே 10 வருடங்கள் மற்றும் ரூ. 7 500 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தன.
- அலுவலக உபகரணங்களுடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு.

| கொள்வனவுத் திகதி | கிரயம் (ரூ.'000) | பயன்தரு ஆயுட்காலம் (வருடங்கள்) |
|---|---|---|
| 01.04.2024 | 30 000 | 5 |
| 01.10.2024 | 20 000 | 5 |
| மொத்தக் கிரயம் | 50 000 | |

அலுவலக உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதி பூச்சியமாகும். அலுவலக உபகரணங்களின் கொள்வனவுத் திகதியைக் கருத்திற் கொள்ளாது முழு வருடத்துக்கும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது.

(v) கம்பனி 01.04.2024 இல் மோட்டார் வாகனமொன்றின் சொத்துப்பாவனை உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான குத்தகை ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. இத்திகதியில் ஆரம்பக் கொடுப்பனவு ரூ. 20 000 000 செலுத்தப்பட்டது. 01.04.2024 இல் உள்ளவாறு மொத்தக் குத்தகைத் தவணைக் கட்டணங்களின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 30 000 000 ஆக இருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின்படி குத்தகைக் காலப்பகுதியில் ஒவ்வொன்றும் ரூ. 8 000 000 ஆன 5 சம வருடாந்தத் தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளன. முதலாவது தவணைக் கட்டணம் 31.03.2025 இல் செலுத்தப்பட்டது. மோட்டார் வாகனத்தின் உடமையானது குத்தகைக்கால முடிவில் குத்தகைக்கு எடுத்தவருக்கு மாற்றப்படமாட்டாது. மோட்டார் வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 8 வருடங்களாகும். அதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாகும். 31.03.2025 மற்றும் 31.03.2026 களில் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டி முறையே ரூ. 3 126 000 மற்றும் ரூ. 2 618 000 ஆகும். செலுத்திய ஆரம்ப வைப்பும், முதலாவது தவணைக் கட்டணமும் சொத்துப் பாவனை உரிமைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் காசுக்கணக்கில் செலவு வைக்கப்பட்டது. இக்குத்தகை தொடர்பில் வேறு எக்கணக்குப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இம் மோட்டார் வாகனமானது பொருட்களின் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

(vi) 31.03.2025 இல் செலுத்தப்பட வேண்டிய வருமான வரியானது ரூ. 550 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(vii) கம்பனியின் நிதிக்கூற்றுகளை 31.05.2025 இல் வழங்குவதற்கான அங்கீகாரம் இயக்குநர் சபையால் வழங்கப்பட்டது
பின்வரும் நிகழ்வுகள் 31.03.2025 இற்குப் பின்னர் ஏற்பட்டன.

- வாடிக்கையாளர் ஒருவரால் கம்பனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்கொன்றின் தீர்ப்பானது 30.04.20 இல் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி இத்திகதியில் செலுத்த வேண்டிய நட்ட ஈடு ரூ. 600 000 முழுமைய கொடுப்பனவாக கம்பனியால் செலுத்தப்பட்டது. இவ்வழக்கானது 10.12.2024 இல் தொடுக்கப்பட்டதாகும்.
- 31.03.2025 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் ஒருவர் முறிவடைந்தவரென 15.05.2025 இ நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வியாபார வருமதிக இவ்வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 3 500 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. பல நினைவூட்டல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கம்பனி இவ்வாடிக்கையாளரிடமிருந்து 01.05.2025 இல் ரூ. 1 200 000 ஐ மட்டு பெறக்கூடியதாக இருந்தது.
- 25.05.2025 இல் இயக்குநர்கள் சாதாரண பங்குதாரர்களுக்கு இறுதிப் பங்கிலாபமாக ரூ. 500 000 ஐப் பிரேரித்த

**வேண்டப்படுவது:**

'LKAS 1 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுர நோக்கத்துக்கான ஜனகன் PLC இன் பின்வரு நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங் வருமானக் கூற்று

(2) 31.03.2025 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

(3) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(மொத்தம் 40 புள்ளிக

2. (அ) வரையறுத்த நந்தன் புடவை (தனியார்) கம்பனியானது தனது ஊழியர்களுக்கான சம்பளத்தினை வழ நேர அடிப்படை மற்றும் வெளியீட்டு அடிப்படை எனும் இரண்டு முறைகளையும் பயன்படுத்துகிறது. 20 செப்டம்பர் மாதத்திற்கான ஊழியர் சேமலாப நிதி (EPF) இற்குச் செய்யப்பட்ட பங்களிப்புக்கள் தொடர்ப தகவல்கள் பின்வருமாறு:

| ஊழியரின் பெயரும் பதவியும் | ஊழியர் இலக்கம் | EPF பங்களிப்பு (ரூ.) வேலைகொள்வோர் (12%) | ஊழியர் (8%) | மொத்தம் |
|---|---|---|---|---|
| சில்வா (முகாமையாளர்) | 01 | 16 200 | 10 800 | 27 000 |
| பரணி (இயந்திர இயக்குனர்) | 02 | 14 160 | 9 440 | 23 600 |
| குமரன் (இயந்திர இயக்குனர்) | 03 | 9 600 | 6 400 | 16 000 |
| நதீசா (தரக் கட்டுப்பாட்டாளர்) | 04 | 9 120 | 6 080 | 15 200 |
| மொத்தம் | | 49 080 | 32 720 | 81 800 |

மேலதிக தகவல்கள்:

(i) முகாமையாளருக்கு மாதாந்த அடிப்படைச் சம்பளமாக ரூ. 108 000 செலுத்தப்படுகிறது. ஏனை ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளமானது வெளியீட்டு அடிப்படையில் செலுத்தப்படுகிறது.

(ii) EPF மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) பங்களிப்புக்கள் அனைத்துப் படிகளும் உள்ளிட்ட மொ சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன. வேலை கொள்வோரின் ETF இற்கான பங்களிப்பு ஆகும்.

(iii) ஒவ்வொரு ஊழியருக்கும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக ரூ. 17 000 செலுத்தப்படுகிறது.

(iv) முகாமையாளருக்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படிக்கு மேலதிகமாக நிலையான மாதாந்தப் பிரய படியொன்று செலுத்தப்படுகிறது.

(v) இயந்திர இயக்குனர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு வெளியீட்டு அடிப்படையில் அடிப்படைச் சம் செலுத்தப்படுகிறது. மேலும், இயந்திர இயக்குனர்களுக்கு அவர்களின் செயற்றிறனின் அடிப்படையில் உற்ப படியொன்று செலுத்தப்படுகிறது.

| ஊழியர் | அலகுகள் | அலகொன்றிற்கான வீதம் (ரூ.) | உற்பத்திப்படி (ரூ.) |
|---|---|---|---|
| பரணி | 350 | 250 | ? |
| குமரன் | 240 | 250 | ? |

(vi) உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து 590 அலகுகளினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டாளருக்கு அலகொன்றிற்கு ரூ. 100 வீதம் செலுத்தப்பட்டுள்ளது.

(vii) பரணி மற்றும் நதீசா ஆகியோர் ஊழியர் கடனைப் பெற்றுள்ளதுடன் அவர்களின் மாதாந்தக் கடன் தவ கட்டணக் கழிப்பனவுகள் முறையே ரூ. 12 500 மற்றும் ரூ. 5 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

வரையறுத்த நந்தன் புடவை (தனியார்) கம்பனியின் 2025 செப்டம்பர் மாதத்திற்கான சம்பளப் பட்டியல்

(10 புள்

[பக். 4 ஐப்

(ஆ) ஜோன் PLC ஆனது 'A', 'B' எனும் இரண்டு வகையான மெத்தைகளை உற்பத்தி செய்கிறது. இக்கம்பனியானது 'இயந்திரம்', 'முடிவுறுத்தல்' என்னும் இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத் திணைக்களமான 'களஞ்சியத்தையும்' கொண்டுள்ளது. அனைத்துத் திணைக்களங்களும் தனிக் கட்டடமொன்றில் காணப்படுகின்றன. இக்கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு மட்டமானது வகை 'A' யின் 3 000 இனையும் வகை 'B' யின் 2 000 இனையும் உள்ளடக்கிய 5 000 மெத்தைகளாகும்.

இயந்திரத் திணைக்களம், முடிவுறுத்தல் திணைக்களங்களின் மேந்தலை உறிஞ்சல் வீதங்கள் முறையே இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் நேர் ஊழிய மணித்தியாலங்களில் கணிக்கப்பட்டுள்ளன.

கம்பனியால் ஏற்கனவே கணிக்கப்பட்ட மேந்தலை உறிஞ்சல் வீதங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | இயந்திரம் | முடிவுறுத்தல் |
|---|---|---|
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | இயந்திர மணித்தியாலமொன்றுக்கு ரூ. 300 | நேர் ஊழிய மணித்தியாலமொன்றுக்கு ரூ. 200 |
| பாதீடிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் | 30 000 | 2 000 |
| பாதீடிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 1 000 | 20 000 |

எனினும், மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணையை ஆய்வு செய்தபோது கம்பனியின் முகாமையானது பின்வரும் வழுக்களையும் விடுபாடுகளையும் கண்டுபிடித்துள்ளது. அத்துடன் முகாமையானது சில மேந்தலைப் பகிர்வு அடிப்படைகளுக்கு மீளாய்வினையும் பிரேரித்துள்ளது.

- பாதீடிடப்பட்ட நேரில் ஊழியங்களான ரூ. 1 000 000 மற்றும் ரூ. 2 000 000 என்பன முறையே இயந்திரம் மற்றும் முடிவுறுத்தல் பகுதிகளுடன் தொடர்புடையவையாகும். எனினும், இத்தொகைகள் இயந்திரத் திணைக்களத்திற்கு ரூ. 2 000 000 எனவும் முடிவுறுத்தல் திணைக்களத்திற்கு ரூ. 1 000 000 எனவும் தவறுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இயந்திரம் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களிற்கான இயந்திரக் காப்புறுதிக் கட்டணங்கள் முறையே ரூ. 3 140 000 மற்றும் ரூ. 1 860 000 ஆகியவை மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணையைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- சில திணைக்களங்களின் மேந்தலைகளை மிகவும் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக மேந்தலைப் பகிர்வு அடிப்படைகளுக்குப் பின்வரும் மீள் திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

| மேந்தலை வகை | பாவித்த அடிப்படை | பிரேரித்த அடிப்படை |
|---|---|---|
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | இயந்திரக் கிரயம் | இயந்திரத்தின் கொண்டுசெல் தொகை |
| தொழிற்சாலை மின்சாரச் செலவுகள் | தளப்பரப்பு (சதுர மீற்றர்) | மின்சார நுகர்வு (கிலோவோற் மணித்தியாலங்கள்) |

- களஞ்சியத் திணைக்களத்தின் மொத்த மேந்தலைகளை உற்பத்தித் திணைக்களங்களிற்கு மீள் பகிர்வு செய்த அடிப்படையினைப் பின்வருமாறு மாற்றுவதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

| பாவித்த அடிப்படை | பிரேரிக்கப்பட்ட அடிப்படை |
|---|---|
| வழங்கப்பட்ட களஞ்சிய வேண்டுதல்களின் எண்ணிக்கை | மூலப்பொருள் நுகர்வு விகிதம் |

- மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணையைத் தயாரிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட்ட களஞ்சியத் திணைக்களத்தின் பாதீடிடப்பட்ட மொத்த மேந்தலைகள் ரூ. 2 000 000 ஆகும்.

மேலதிக தகவல்கள்:

- பின்வரும் தகவல்கள் மேந்தலைப்பகிர்வு மற்றும் மீள்பகிர்வு அடிப்படைகளுடன் தொடர்பானவை.

| | இயந்திரம் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| இயந்திரத்தின் கிரயம் (ரூ.'000) | 8 000 | 6 000 | 4 000 |
| இயந்திரத்தின் கொண்டுசெல் தொகை (ரூ.'000) | 6 000 | 2 000 | 1 000 |
| தளப்பரப்பளவு (சதுர மீற்றர்) | 3 000 | 2 000 | 1 000 |
| மின்சார நுகர்வு (கிலோவோற் மணித்தியாலங்கள்) | 5 000 | 500 | 500 |
| வழங்கப்பட்ட களஞ்சிய வேண்டுதல்களின் எண்ணிக்கை | 150 | 100 | – |
| மூலப்பொருள் நுகர்வு விகிதம் | 80% | 20% | – |

- பாதீடிடப்பட்ட வருடாந்த இயந்திர பெறுமானத் தேய்வு மற்றும் பாதீடிடப்பட்ட தொழிற்சாலை மின்சாரச் செலவுகள் முறையே ரூ. 2 250 000 மற்றும் ரூ. 600 000 ஆகும்.
- வகை A மெத்தையொன்றை உற்பத்தி செய்வதற்கான நேர்க்கிரயம்:
  - நேர் மூலப்பொருட்கள் - 4 கிலோகிராம், கிலோகிராம் ஒன்று ரூ. 450
  - நேர் ஊழியம் - 2 மணித்தியாலங்கள், மணித்தியாலமொன்றிற்கு ரூ. 400

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- வகை A மெத்தையொன்றிற்கான செய்முறைப்படுத்தும் நேரமானது இயந்திரத் திணைக்களத்தில் இயந்திர மணித்தியாலங்களும் முடிவுறுத்தல் திணைக்களத்தில் 2 நேர் ஊழிய மணித்தியாலங்களும் ஆகும்.
- விற்பனை விலையானது உற்பத்திக் கிரயத்துடன் 40% இலாபம் சேர்த்துத் தீர்மானிக்கப்படுகிறது.
- இக்காலத்திற்கான பாதீடுபட்ட உற்பத்தியல்லா மேந்தலைகள் ரூ. 1 500 000 ஆக இருப்பதுடன் இது இரண்டு வகையான மெத்தைகளுக்குமிடையில் சமமாகப் பகிரப்படுகிறது.

**வேண்டப்படுவது:**

(1) பின்வருவனவற்றை மிகத் தெளிவாகக் காட்டக்கூடியவாறான திருத்திய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(i) ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஏற்கனவே கணிக்கப்பட்ட மொத்த மேந்தலைகள்

(ii) முகாமையினால் இனங்காணப்பட்ட வழுக்களுக்கும் விடுபாடுகளுக்குமான திருத்தம்

(iii) மேந்தலைப் பகிர்வு அடிப்படைகளில் மீள் திருத்தப் பிரேரணைக்கான சீராக்கம்

(iv) களஞ்சியத் திணைக்களத்தின் மொத்த மேந்தலைகளை மீள்பகிர்வு செய்த பின்னருள்ள ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்தின் மொத்த மேந்தலைகள்

(2) இயந்திரம் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களிற்கான திருத்திய மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) வகை A மெத்தையொன்றின் உற்பத்தி மேந்தலை

(4) வகை A மெத்தையொன்றின் உற்பத்திக் கிரயம்

(5) வகை A மெத்தையின் 3 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் இலாபம்

(30 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

3. (அ) மொத்த வியாபாரக் கம்பனியான வரையறுக்கப்பட்ட சண்முகம் (தனியார்) கம்பனியானது 2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கம்பனியானது பெறுமதிசேர் வரி (VAT) இற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 01.04.2025 இல் உள்ளவாறான கம்பனியின் சுருக்கப்பட்ட நிதிநிலைமைக்கூற்று வருமாறு :

| | (ரூ. மில்லியன்) |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை......... | 600 |
| இருப்பு........ | 220 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்........ | 60 |
| காசும் காசுக்குச் சமமானவையும்........ | 130 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1010** |
| | |
| சாதாரண பங்கு மூலதனம்........ | 600 |
| நிறுத்திவைத்த வருவாய்கள்........ | 200 |
| வங்கிக் கடன்........ | 100 |
| வியாபாரச் சென்மதிகள்........ | 70 |
| செலுத்த வேண்டிய VAT........ | 40 |
| **உரிமையாண்மையும் மொத்த பொறுப்புக்களும்** | **1010** |

30.06.2025 இல் முடிவடைந்த காலாண்டுக் காலப்பகுதியில் கம்பனியில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

| இல. | கொடுக்கல் வாங்கல் |
|---|---|
| 1 | ரூ. 59 மில்லியனுக்குப் பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன (VAT ரூ. 9 மில்லியன் உட்பட). |
| 2 | ரூ. 118 மில்லியனுக்குப் பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன (VAT ரூ. 18 மில்லியன் உட்பட). இப் பொருட்களின் கிரயம் ரூ. 70 மில்லியனாகும். |
| 3 | ரூ. 29.5 மில்லியனுக்கு முன்னர் விற்கப்பட்ட பொருட்கள் திருப்பியனுப்பப்பட்டன (VAT ரூ. 4.5 மில்லியன் உட்பட). இப்பொருட்களின் கிரயம் ரூ. 16 மில்லியனாகும். |
| 4 | ரூ. 10 மில்லியன் கழிவொன்றைப் பெற்ற பின்னர் ரூ. 60 மில்லியன் வியாபாரக் கடன்கொடுத்தோர் கொடுத்துத் தீர்க்கப்பட்டனர். |
| 5 | ரூ. 5 மில்லியன் காசுக் கழிவு அனுமதிக்கப்பட்ட பின்னர் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரூ. மில்லியன் பெறப்பட்டது. |
| 6 | இக்காலாண்டுக்கான வட்டிச் செலவு ரூ. 10 மில்லியன் உட்பட செலுத்தப்பட்ட வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ. 50 மில்லியனாகும். |

7 புதிய இயந்திரமொன்று ரூ. 12 மில்லியனுக்கு காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. இவ்வியந்திரத்தின் ஆரம்பப் பரிசோதனை ஓட்டத்துக்கான மூலப்பொருட் கிரயம் ரூ. 1 மில்லியனும் செலுத்தப்பட்டது.

8 இக்காலாண்டுடன் தொடர்புடைய மின்சாரச் செலவுகள் ரூ. 3 மில்லியன் செலுத்தப்பட்டது.

9 வணிக மேம்பாட்டுச் செயற்பாடொன்றிற்காக ரூ. 2 மில்லியன் கிரயமுள்ள பொருட்கள் பாடசாலை ஒன்றுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

10 ரூ. 25 மில்லியன் நிறுத்திவைத்த வருவாய்கள், சாதாரண பங்குகளை வழங்கி மூலதனமாக்கப்பட்டது.

11 01.04.2025 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய VAT ரூ. 40 மில்லியன் செலுத்தப்பட்டது.

12 முகாமை இயக்குநரின் தனிப்பட்ட வருமான வரி ரூ. 4 மில்லியன் கம்பனியால் செலுத்தப்பட்டது.

13 சுயமதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட இக்காலாண்டுக்கான வருமான வரி ரூ. 8 மில்லியன் செலுத்தப்பட்டது.

14 இக்காலாண்டுக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு ரூ. 14 மில்லியன் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 01.04.2025 இல் உள்ளவாறான மீதிகளைப் பதிவு செய்வதுடன் 1 தொடக்கம் 14 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை (பெறுமதியுடன்) காட்டுக. பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும், குறைவடையுமாயின் (-) எனவும் ஒவ்வொரு பெறுமதிக்கும் முன்னே குறிப்பிடுக. கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் விற்பனைத் திரும்பல்கள் என்பவற்றின் மீதான VAT ஆனது கணக்கீட்டுச் சமன்பாட்டிலுள்ள VAT கட்டுப்பாட்டு நிரலில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். (இவ்வினாவுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

(ரூ.மில்லியன்)

| மீதி / கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | = | பொறுப்புக்கள் | | + | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி, உபகரணங்கள் | இருப்பு | வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | காசும் காசுக்குச் சமமானவைகளும் | வங்கிக் கடன் | வியாபாரக் கொடுக்குமதிகள் | VAT கட்டுப்பாடு | சாதாரண பங்கு மூலதனம் | நிறுத்தி வைத்த வருவாய்கள் |
| 01.04.2025 இல் மீதி | | | | | | | | | |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| — | | | | | | | | | |
| — | | | | | | | | | |
| 30.06.2025 இல் மீதி | | | | | | | | | |

(2) 30.06.2025 இல் முடிவடைந்த காலாண்டுக்கான தேறிய இலாபம் (*நிறுத்தி வைத்த வருவாய்கள் நிரலின் அடிப்படையில்*)

(25 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தகவல்கள் ஞாதிகா விளையாட்டுக் கழகத்தின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | 31.03.2025 இல் உள்ளவாறு (ரூ.'000) | 31.03.2024 இல் உள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| திரண்ட நிதி | ? | 900 |
| ஆயுள் அங்கத்துவ நிதி | 320 | 400 |
| விளையாட்டு உபகரண நிதி | ? | 800 |
| கட்டட நிதி | 2 000 | – |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 1 350 | 1 500 |
| கட்டட நடைமுறை வேலை | 300 | – |
| நிலுவையாகவுள்ள சந்தாப்பணம் | ? | 30 |

**மேலதிக தகவல்கள்:**

(i) இவ்விளையாட்டுக் கழகம் 31.03.2024 இலுள்ளவாறு 60 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. இவர்களுள் 10 பேர் ஆயுள் அங்கத்தவர்களாவர். ஆயுள் அங்கத்துவமானது விளையாட்டுக் கழகத்தின் ஆரம்ப அங்கத்தவர்களுக்குரியதாகும்.

(ii) ஆயுள் அங்கத்துவக் கட்டணமானது வருடந்தோறும் வருமானமாக இனங்காணப்படுகின்றது.

(iii) அங்கத்துவர் ஒருவருக்கான வருடாந்த சந்தா ரூ. 12 000 ஆகும். வருடாந்த சந்தாவானது வருடத்தின் ஆரம்பத்தில் முழுமையாக அல்லது ரூ. 1 000 வீதம் மாதாந்தச் சம கொடுப்பனவாகச் செலுத்தப்பட முடியும். வருடாந்த சந்தாவானது வருட ஆரம்பத்தில் முழுமையாகச் செலுத்தப்பட்டால் அங்கத்தவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும். பெறப்பட்ட தேறிய சந்தாப் பணத்தை வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iv) 01.04.2024 இல் 15 புதிய அங்கத்தவர்கள் விளையாட்டுக் கழகத்தில் இணைந்து கொண்டனர். புதிய அங்கத்தவர் ஒருவர் விளையாட்டுக் கழகத்தில் இணையும் போது ரூ. 5 000 அனுமதிக் கட்டணம் செலுத்த வேண்டும். 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் 40 அங்கத்தவர்கள் (15 புதிய அங்கத்தவர்கள் உட்பட) தமது வருடச் சந்தாவை வருடத்தின் ஆரம்பத்தில் ஒரே தடவையில் செலுத்தினர். மீதமாகவுள்ள அங்கத்தவர்கள் மாதாந்த அடிப்படையில் சந்தாவைச் செலுத்தினர். இவ்வங்கத்தவர்களுள் 05 பேர் 09 மாதங்களுக்கான சந்தாவை மட்டும் செலுத்தியதுடன் மீதி அங்கத்தவர்கள் முழு வருடத்துக்குமான சந்தாவைச் செலுத்தியிருந்தனர். 31.03.2024 இல் நிலுவையாகவிருந்த சந்தா இவ்வருடத்தில் பெறப்பட்டது.

(v) பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்துவதற்கு இணங்கிய மொத்தத் தொகையின் அடிப்படையில் நன்கொடைகளை வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

(vi) விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென முன்னைய வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைபொன்று 'விளையாட்டு உபகரண நிதி' என இனங்காணப்பட்டுள்ளது. 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் விளையாட்டுக் கழகம் ரூ. 400 000 கிரயமுள்ள விளையாட்டு உபகரணங்களைக் காசுக்குக் கொள்வனவு செய்தது. இக்கொள்வனவிற்காக ரூ. 300 000 விளையாட்டு உபகரண நிதியத்திலிருந்து பயன்படுத்தப்பட்டது.

(vii) உள்ளக விளையாட்டரங்கு ஒன்றினை நிர்மாணிப்பதற்கென 01.01.2025 இல் பெறப்பட்ட ரூ. 2 000 000 நன்கொடையானது 'கட்டட நிதியாக' இனங்காணப்பட்டுள்ளது. விளையாட்டுக் கழகமானது இந்நிதியிலிருந்து விளையாட்டரங்கின் வடிவமைப்பை விருத்திசெய்வதற்கென ரூ. 150 000 ஐ 20.01.2025 இல் செலுத்தியதுடன் 01.03.2025 இல் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிர்மாணச் செயற்பாடுகளுக்கான முதலாவது கொடுப்பனவு ரூ. 300 000 ஆனது 31.03.2025 இல் செலுத்த வேண்டியதாக இருந்தது. இத்தொகையானது 10.04.2025 இல் செலுத்தப்பட்டது. கட்டட நிதியானது கட்டட நிர்மாணம் தொடர்பான கிரயங்களுக்குப் பாவிக்கப்படுகிறது.

(viii) விளையாட்டுக் கழகத்தின் நடைமுறை வருடத்துக்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 550 000 ஆகக் கணிப்பிடப்பட்டது. இது உள்ளக விளையாட்டரங்க வடிவமைப்புக் கிரயத்தையும் உள்ளடக்கியுள்ளது. எனினும், இச்செலவுகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வை உள்ளடக்கியிருக்கவில்லை.

(ix) விளையாட்டு உபகரணக் கொள்வனவு தவிர இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவோ அல்லது அகற்றலோ இடம்பெறவில்லை.

**வேண்டப்படுவது:**

விளையாட்டுக் கழகம் தொடர்பில்:

(1) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான சந்தாக் கணக்கு

(2) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று

(3) 31.03.2025 இல் உள்ளவாறான உரிமையாண்மை (ஒவ்வொரு உருப்படியையும் தனித்தனியாகக் காட்டுக.)

(15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

4. (அ) நரேன் ரேடர்ஸ் சில்லறை வணிகமொன்றை 01.01.2025 இல் தொடங்கியது. இந்த வணிகம் பொருட்களைக் கடன் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவு செய்வதுடன், கடன் அடிப்படையிலும் காசிற்கும் விற்பனை செய்கிறது. இவ்வணிகம் பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது. 2025 ஜனவரி மாதத்தில் இக்கம்பனியில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

| திகதி | கொடுக்கல் வாங்கல் |
|---|---|
| 01.01.2025 | உரிமையாளர் ரூ. 200 000 காசினையும் ரூ. 480 000 பெறுமதியான தளபாடங்களையும் மூலதனமாக முதலிட்டுள்ளார். |
| | வருடாந்த வட்டி வீதம் 12% இல் ரூ. 600 000 வங்கிக்கடன் பெறப்பட்டது. |
| 05.01.2025 | தனுஷிடமிருந்து கடனிற்கு ரூ. 472 000 இற்குப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன (ரூ. 72 000 VAT உட்பட). |
| 07.01.2025 | ரூ. 118 000 காசிற்குப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன (ரூ.18 000 VAT உட்பட). |
| 12.01.2025 | விதுரனிற்கு கடனிற்கு ரூ. 236 000 பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன (ரூ. 36 000 VAT உட்பட). |
| 15.01.2025 | அருணிடமிருந்து கடனிற்கு ரூ. 531 000 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன (ரூ. 81 000 VAT உட்பட). |
| 20.01.2025 | சந்திரனிற்கு கடனிற்கு ரூ. 590 000 பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன (ரூ. 90 000 VAT உட்பட). |
| 22.01.2025 | விதுரனிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகை முழுவதும் பெறப்பட்டது. |
| 25.01.2025 | ரூ. 10 000 கழிவு பெறப்பட்டு தனுஷிற்குக் கொடுக்க வேண்டிய முழுத் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்பட்டது. |
| 28.01.2025 | செயற்பாட்டுச் செலவிற்காக ரூ. 140 000 செலுத்தப்பட்டது. |
| 31.01.2025 | வட்டி ரூ. 6 000 உட்பட மாதாந்தக் கடன் தவணைக் கட்டணம் ரூ. 13 000 செலுத்தப்பட்டது. |

[பக். 8 ஐப் பார்க்க

**மேலதிக தகவல்கள்:**

- தளபாடமானது 01.01.2025 இலிருந்து பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. அதன் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். அதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாகும்.

**வேண்டப்படுவது:**

(1) 2025 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்
 (i) காசுப் பெறுவனவு நாளேடு
 (ii) காசுக் கொடுப்பனவு நாளேடு
 (iii) விற்பனை நாளேடு
 (iv) கொள்வனவு நாளேடு
 (v) பொது நாளேடு

(2) மூலப்பதிவேடுகளின் மொத்தங்களைப் பொதுப் பேரேட்டிற்கு மாற்றுவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (*விளம்பல் தேவைப்படுகின்றது*)

(3) 2025 ஜனவரி மாதத்திற்கான பொதுப் பேரேட்டில் காணப்படும் பின்வரும் கணக்குகள்
 (i) காசுக் கணக்கு
 (ii) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு
 (iii) வங்கிக்கடன் கணக்கு **(25 புள்ளிகள்)**

(ஆ) உற்பத்திக் கம்பனியொன்று தன்னிடம் தற்போதுள்ள இயந்திரமொன்றை உயர் தொழில்நுட்பம் கொண்ட இயந்திரத்தினால் பிரதியீடு செய்வதற்கான செயற்றிட்டமொன்றினைக் கருத்திற்கொள்கிறது. புதிய இயந்திரத்தினை 5 வருடங்களிற்குப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் பின்வரும் மதிப்பீடுகள் தரப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை ........ | 11 000 |
| புதிய இயந்திரத்தின் நிறுவுதல் மற்றும் போக்குவரத்துக் கிரயம் ........ | 1 000 |
| மேலதிகமாகத் தேவைப்படும் தொழிற்படு மூலதனம் ........ | 2 200 |
| பழைய இயந்திரத்தின் விற்பனை விலை ........ | 1 200 |
| பழைய இயந்திரத்தின் கொண்டுசெல் தொகை ........ | 400 |
| பழைய இயந்திரத்தின் விற்பனையில் எழுந்த ஆதாயத்திற்குச் செலுத்த வேண்டிய வரி | 250 |
| செயற்றிட்டக் கால முடிவில் புதிய இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி ........ | 2 000 |

**மேலதிக தகவல்கள்:**

- செயற்றிட்டக் கால முடிவில் மேலதிகமாகத் தேவைப்படும் தொழிற்படு மூலதனமானது முழுமையாக மீளப் பெறப்படமுடியும்.
- புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்தால் முதலாம் வருடத்தில் எதிர்பார்க்கப்படும் வருடாந்த காசு உட்பாய்ச்சல் ரூ. 5 000 000 ஆக இருக்கும் என்றும் அதன் பின்னர் செயற்றிட்டத்தின் ஒவ்வொரு வருடமும் இத்தொகை 10% ஆல் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் (வருடாந்த பெறுமானத்தேய்வு உட்பட) பின்வருமாறு.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டுச் செலவுகள் (ரூ.'000) | 2 900 | 2 900 | 2 950 | 3 050 | 3120.5 |

- இக்கம்பனியானது சொத்துக்களை நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திப் பெறுமானத்தேய்விடுகின்றது.
- கம்பனியின் வருமானவரி வீதமானது வருடாந்த இலாபத்தில் 20% ஆக இருப்பதுடன் வருமானவரியானது ஒவ்வொரு வருட இறுதியிலும் செலுத்தப்பட வேண்டும்.
- செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதம் 12% ஆகும். இதன் கழிவீட்டுக் காரணிகள் பின்வருமாறு.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி (*கிட்டிய இரு தசமதானத்திற்கு*) | 0.89 | 0.80 | 0.71 | 0.64 | 0.57 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப மற்றும் வருடாந்த காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும் (ஒவ்வொரு காசுப்பாய்ச்சல் உருப்படியையும் தனித்தனியாகக் காட்டக்கூடியவாறு)

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் செயற்றிட்டத்தில் முதலீடு செய்வதற்கான பரிந்துரை

(4) செயற்றிட்டத்தின் கணக்கீட்டு வருவாய் வீதம் (*சராசரி முதலீட்டின் அடிப்படையில்*)

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙබ් අඩවියට පිවිසෙන්න

5. (அ) பாலன், சீலன் ஆகியோர் சில்லறை வணிகமொன்றில் பங்காளர்களாக இருந்தனர். அவர்கள் இலாபங்களையும் நட்டங்களையும் சமமாகப் பகிர்ந்தனர். இப்பங்காளர்கள் 01.04.2024 இல் டிலான், மற்றும் எழில் ஆகிய இருவரையும் புதிய பங்காளர்களாக இணைத்துக் கொண்டு வணிகத்தை முன்னேற்றுவதற்கு இணங்கினர். புதிய பங்குடமை ஒப்பந்தத்தின் விதிமுறைகள் பின்வருமாறு:

- பாலன், சீலன், டிலான், எழில் ஆகியோருக்கிடையில் இலாபங்களும் நட்டங்களும் முறையே 2 : 2 : 1 : 1 என்ற விகிதத்தில் பகிரப்படும்.
- பங்காளர்கள் வருட இறுதியிலுள்ள மூலதனக் கணக்கு மீதிகள் மீது 10% வருடாந்த வட்டி பெறுவதற்கு உரித்துடையவராவர்.
- ஒவ்வொரு பங்காளரும் வருடாந்தச் சம்பளமாக ரூ. 1 200 000 இற்கு உரித்துடையவராவர். இது காசாகச் செலுத்துவதன் மூலமோ அல்லது வணிகத்தின் வியாபாரப் பொருட்களைக் கிரயத்தில் வழங்குவதன் மூலமோ கொடுத்துத் தீர்க்கப்படலாம்.
- பங்காளர்கள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத விடயங்களுக்கு 1890 இன் பங்குடமைச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கு இணங்கினர்.

31.03.2025 இல் உள்ளவாறான பங்குடமையின் பரீட்சை மீதி வருமாறு :

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| விற்பனை வருவாய் | | 30 000 |
| விற்பனைக் கிரயம் | 8 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 8 000 | |
| விநியோகம் மற்றும் ஏனைய செலவுகள் | 3 000 | |
| காசு | 1 000 | |
| இருப்பு | 2 000 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 26 000 | |
| 01.04.2024 இல் பாலனால் வழங்கப்பட்ட கடன் | | 2 000 |
| 01.04.2024 இல் நடைமுறைக் கணக்குகள் : பாலன் | | 600 |
| சீலன் | | 400 |
| 01.04.2024 இல் மூலதனக் கணக்குகள் : பாலன் | | 4 000 |
| சீலன் | | 4 000 |
| டிலானால் கொண்டுவரப்பட்ட காசு | | 2 000 |
| எழிலால் கொண்டுவரப்பட்ட காசு | | 1 000 |
| எழிலால் கொண்டுவரப்பட்ட வியாபார இருப்பு | | 4 000 |
| | 48 000 | 48 000 |

மேலதிக தகவல்கள்:

(i) 01.04.2024 இல் டிலான், எழில் ஆகியோரால் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள்:

| சொத்து | டிலான் (ரூ.'000) | எழில் (ரூ.'000) |
|---|---|---|
| காணி | 3 000 | - |
| வியாபார இருப்பு | - | 4 000 |
| காசு | 2 000 | 1 000 |
| மொத்தம் | 5 000 | 5 000 |

(ii) புதிய பங்காளர்கள் இருவராலும் கொண்டுவரப்பட்ட காசும் எழிலால் கொண்டுவரப்பட்ட வியாபார இருப்பும் மட்டுமே புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. டிலானால் கொடுக்கப்பட்ட காணி புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை. டிலானால் கொடுக்கப்பட்ட காணியானது வணிகத்தின் வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்படுவதுடன் எழிலால் கொடுக்கப்பட்ட இருப்பானது விற்பனைக்காகக் காட்சியறைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

(iii) புதிய பங்காளர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 2 400 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இது தொடர்பில் பங்காளர் மூலதனக் கணக்குகளில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(iv) இவ்வருடத்தில் பங்காளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:

| பங்காளர் | காசாகச் செலுத்தியது (ரூ.'000) | வியாபாரப் பொருட்களாகத் தீர்க்கப்பட்டது (ரூ.'000) | செலுத்திய மொத்தச் சம்பளம் (ரூ.'000) |
|---|---|---|---|
| பாலன் | 1 200 | - | 1 200 |
| சீலன் | 800 | - | 800 |
| டிலான் | 500 | 200 | 700 |
| எழில் | 400 | 100 | 500 |
| மொத்தம் | 2 900 | 300 | 3 200 |

[பக். 10 ஐப் பார்க்க

பங்காளர்களுக்குக் காசாகச் செலுத்திய சம்பளங்கள் நிர்வாகச் செலவுகளாகப் பதியப்பட்டுள்ளதுடன் சம்பளங்களுக்காக வழங்கிய வியாபாரப் பொருட்களுக்குப் பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

(v) இறுதியிருப்பானது 31.03.2025 இல் கிடைக்ககூடியதாயிருந்த பௌதீக இருப்பின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது.

(vi) டிலான் வணிகத்துக்குக் கொடுத்த காணியை தனது சொந்தப் பணம் ரூ. 50 000 ஐப் பயன்படுத்தி துப்புரவு செய்தார். இச் செலவு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

(vii) இந்தியாவில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சிக்கு சீலன் அனுப்பப்பட்டிருந்தார். இந்த பயிற்சியுடன் தொடர்புடைய முழுக் கிரயமாகிய ரூ. 300 000 ஆனது சீலனின் தனிப்பட்ட நிதியிலிருந்து அவரால் செலவிடப்பட்டது. பங்காளர்கள் இத்தொகையை அவருக்கு மீளச் செலுத்த இணங்கியதுடன், அதனைப் பங்குடமையின் ஒரு செலவாகக் கொள்ளவும் இணங்கினர்.

(viii) இவ்வருடத்தில் பங்குடமையானது தீக்காப்புறுதித் தவணைக் கட்டணமாக ரூ. 120 000 ஐச் செலுத்தியது. இத்தொகையானது நிர்வாகச் செலவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்காப்புறுதித் தவணைக் கட்டணமானது எழிலின் வீட்டுத் தீக்காப்புறுதிக்காகச் செலுத்திய ரூ. 20 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. பங்குடமையானது இத்தொகையை அவரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (*பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட*)

(2) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்குகளும் நடைமுறைக் கணக்குகளும்

(25 புள்ளிகள்)

(ஆ) நபீல் PLC ஆனது 01.04.2024 இல் வியாபார வணிகமொன்றை ஆரம்பித்தது. இக் கம்பனி 01.04.2024 இல் சாதாரண பங்குகளை வழங்கியதுடன் 30.09.2024 இல் 10% வங்கிக் கடனொன்றையும் பெற்றுக்கொண்டது. 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்தில் வேறெந்த சாதாரண பங்குகள் வழங்கலும் இடம்பெறவில்லை. பின்வரும் தகவல்கள் நடைமுறை வருடத்துடன் தொடர்புடையவையாகும்.

| | |
|---|---|
| **31.03.2025 இல் உள்ளவாறு:** | **ரூ.'000** |
| மொத்தச் சொத்துக்கள் | 42 000 |
| மொத்த உரிமையாண்மை | 24 000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 18 000 |
| இருப்பு | 3 016 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 2 580 |
| காசு | 164 |
| **31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கானது:** | |
| விற்பனைக் கிரயம் | 15 080 |
| செயற்பாட்டுச் செலவுகள் (பெறுமானத்தேய்வு உட்பட) | 2 720 |
| வட்டிச் செலவு | 720 |
| வரிச் செலவு | 1 080 |

**மேலதிகத் தகவல்கள்:**

- 31.03.2025 இல் உரிமையாண்மைக்குக் கடன்விகிதம் 0.60
- நடைமுறை வருடத்துக்கான உரிமையாண்மை மீதான திரும்பல் (ROE) 15%
- சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 2 000 000
- வங்கிக்கடனைத் தவிர நடைமுறையல்லா பொறுப்புக்கள் எவையும் இருக்கவில்லை.
- கம்பனியின் எல்லா விற்பனைகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
- நடைமுறை வருடத்தில் விற்பனைகள் மட்டுமே கம்பனியின் ஒரேயொரு வருமான மூலமாகும்.
- கம்பனி ரூ. 800 000 பங்குலாபங்களை நடைமுறை வருடத்துக்குச் செலுத்தியது.
- வருடமொன்றில் 360 நாட்கள் எனக் கொள்க.

நடைமுறை வருடத்துக்கான நபீல் PLC உடன் ஒப்பிடக்கூடியதாகவுள்ள கஸ்வின் PLC இன் பின்வரும் விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| பங்கொன்றுக்கான பங்குலாபம் (ரூ.) | 0.30 |
| நடைமுறை விகிதம் | 1.80 |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகள்) | 5.5 |
| இருப்பு வைத்திருக்கும் காலம் (நாட்கள்) | 80 |
| மொத்த இலாப விகிதம் | 32% |

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ඉක්මනින් ලබා ගැනීමට Past Papers Wiki වෙබ් අඩවියට පිවිසෙන්න

**வேண்டப்படுவது:**

(1) நபீல் PLC இன் 31.03.2025 முடிவடைந்த வருடத்திற்கான வரிக்குப் பின்னரான இலாபம்

(2) நபீல் PLC இன் நடைமுறையாண்டிற்கான பின்வரும் விகிதங்கள்:
  (i) பங்கொன்றிற்கான பங்குலாபம்
  (ii) நடைமுறை விகிதம்
  (iii) கடன்பட்டோர் புரள்வு விகிதம் (வருட முடிவிலுள்ள கடன்பட்டோர் மீதி அடிப்படையில்)
  (iv) இருப்பு வைத்திருக்கும் காலம் (வருட இறுதியிலுள்ள இருப்பு மீதி அடிப்படையில்)
  (v) மொத்த இலாப விகிதம்

(3) மேற்படி (2) இல் கணிக்கப்பட்டுள்ள விகிதங்களை கஸ்வின் PLC இன் விகிதங்களுடன் ஒப்பீடு செய்து பின்வரும் ஒவ்வொரு நிலைமைக்குமான கம்பனியின் பெயரை காரணத்துடன் குறிப்பிடுக.
  (i) விற்பனையில் அதிக இலாப வீதத்தைப் பேணும் கம்பனி
  (ii) குறுங்காலப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு உயர் ஆற்றல்களைக் கொண்டுள்ள கம்பனி
  (iii) கடன்பட்டோரிடமிருந்து காசைச் சேகரிப்பதில் கூடிய வினைத்திறன் கொண்ட கம்பனி
  (iv) குறுங்காலத்தில் இருப்புகளை விற்பனை செய்யும் கம்பனி
  (v) எதிர்கால முதலீட்டிற்காக இலாபத்தின் பெரும் பகுதியைக் கொண்டிருக்கும் கம்பனி

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**6. (அ)** சுரேஸ் PLC இன் 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்காக அதன் புத்தகங்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| காசு விற்பனைகள் | 36 500 |
| விற்பனைக் கிரயம் | 30 000 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 10 000 |
| செலுத்திய வட்டிச் செலவு | 6 000 |
| வருமானவரிச் செலவு | 3 500 |
| பங்குகளின் மீதான முதலீட்டிற்காகச் செலுத்திய காசு | 12 000 |
| இயந்திரக் கொள்வனவு | 28 000 |
| சாதாரண பங்குகள் வழங்கல் | 25 000 |
| சாதாரண பங்குதாரர்களுக்கான பங்கிலாபங்கள் | 3 000 |

**மேலதிக தகவல்கள்:**

(i) மொத்த நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் பின்வரும் உருப்படிகளைக் கொண்டுள்ளன.

| | 31.03.2025 இலுள்ளபடி (ரூ.'000) | 31.03.2024 இலுள்ளபடி (ரூ.'000) |
|---|---|---|
| இருப்புக்கள் | 8 000 | 6 500 |
| வியாபார வருமதிகள் | 9 500 | 10 750 |
| காசும் காசிற்குச் சமமானவையும் | (5 650) | 1 100 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 4 750 | 6 250 |
| சென்மதி செயற்பாட்டுச் செலவுகள் | 1 000 | 600 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 850 | 1 250 |

(ii) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான கடன் விற்பனைகள் ரூ. 32 000 000 ஆக இருந்தன.

(iii) 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத்தேய்வுச் செலவு ரூ. 4 500 000 மற்றும் கொடுத்த கழிவு ரூ. 500 000 என்பன செயற்பாட்டுச் செலவுகளுள் உள்ளடங்கியிருந்தன.

(iv) நளின் PLC இடமிருந்து 01.10.2024 இல் மேலே காட்டப்பட்டுள்ள ரூ. 28 000 000 கிரயமான இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பில் கம்பனியானது ரூ. 20 000 000 காசாகச் செலுத்தியதுடன் மிகுதித் தொகையைத் தீர்ப்பதற்கு அதே நாளில் நளின் PLC இற்குச் சாதாரண பங்குகளை வழங்கியது.

(v) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 25 000 000 சாதாரண பங்குகள் வழங்கலானது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

- ரூ. 12 000 000 நிறுத்திவைத்த வருவாயை மூலதனமாக்குதல்
- இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக நளின் PLC இற்கு வழங்கப்பட்ட பங்குகள்
- இவ்வருடத்தில் காசுக்குப் பங்குகளின் பொது வழங்கல்

[பக். 12 ஐப் பார்க்க

(vi) மேலே தரப்பட்ட சாதாரண பங்குதாரர்களுக்கான பங்குலாபங்களான ரூ. 3 000 000 பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது.

| | ரூ.'000 |
|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 2 500 |
| சாதாரண பங்குதாரர்களுக்குப் பிரேரித்த பங்கிலாபம் | 1 500 |
| பங்குகளிலான முதலீட்டிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | (1 000) |
| | 3 000 |

வேண்டப்படுவது:

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2025 இல் முடிவடைந்த வருடத்துக்கான சுரேஸ் PLC இன் காசுப்பாய்ச்சல் கூற்று (செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலினைக் காட்டுவதற்கு நேர்முறையினைப் பயன்படுத்துக).

(20 புள்ளிகள்)

ஆ) 'ஐக்கிய விளையாட்டுக்கழகம்' தனது 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை 2026 ஜனவரி மாதத்தில் 8 விசேட விருந்தினர்களின் பங்குபற்றலுடன் கொண்டாடத் திட்டமிடுகின்றது. இக் கழகமானது 75 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இந் நிகழ்ச்சிக்கான மதிப்பிடப்பட்ட கிரயங்கள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| ஒலி அமைப்பு வாடகைக் கிரயம் | 18 000 |
| விசேட விருந்தினருக்கான மாலைகள் | 8 000 |
| அலங்கரிப்பு | 20 000 |
| மண்டபத்திற்கான கட்டணங்கள் | 12 000 |
| நடனக் குழுவிற்கான கிரயம் | 11 500 |
| நிகழ்ச்சிக்கான தண்ணீர்ப் போத்தல்கள் | 2 500 |
| நினைவுப் பரிசில் ஒன்றிற்கான கிரயம் | 1 000 |
| அங்கத்தவர் ஒருவருக்கான குளிர்பானப் போத்தல் கிரயம் | 400 |
| அங்கத்தவர் ஒருவருக்கான உணவுப் பொதிக் கிரயம் | 1 100 |
| அங்கத்தவர் ஒருவருக்கான T-சேட் ஒன்றின் கிரயம் | 1 500 |

மேலதிக தகவல்கள்:

- விளையாட்டுக்கழகமானது ஒவ்வொரு விசேட விருந்தினருக்கும் நினைவுப் பரிசில் ஒன்றை வழங்கத் தீர்மானித்துள்ளது.
- இந் நிகழ்ச்சியில் பங்குபற்றும் அனைத்து அங்கத்தவர்களும் நினைவுப் பரிசில் ஒன்றையும் T-சேட் ஒன்றையும் பெறுவதற்கு உரித்துடையவராவர்.
- நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் ரூ. 6 000 அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

(1) நிகழ்ச்சிக்கான மொத்த நிலையான கிரயம்

(2) அங்கத்தவர் ஒருவருக்கான மாறும் கிரயம்

(3) அங்கத்தவர் ஒருவருக்கான பங்களிப்பு

(4) நிகழ்ச்சியின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்கு நிகழ்ச்சியில் பங்குபற்ற வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை

(5) நிகழ்ச்சியில் 60 அங்கத்தவர்கள் பங்குபற்றுவார்களாயின் எதிர்பார்க்கப்படும் மிகை

(6) விசேட விருந்தினர்களுக்குக் கொடுக்கப்படும் நினைவுப் பரிசிலுக்கு நிதி அனுசரணை கிடைக்குமாயின், நிகழ்ச்சிக்கான மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்குப் பங்குபற்ற வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை

(7) ரூ. 20 000 நன்கொடையொன்று கிடைப்பதுடன் நிகழ்ச்சியில் 50 அங்கத்தவர்கள் பங்குபற்றுவார்களாயின், நிகழ்ச்சியின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்ய ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் அறவிடவேண்டிய கட்டணம்

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

***

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න